Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபால் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ மார்கழி 5 ஆம் நாள் றஜபு 11 (20-12-61) புதன் கிழமை இதழ் 264

நீங்கள் அணியும் ஆடைகள்
தூய வெண்மையாகத் திகழவேண்டுமானல்
இன்றே!
டொலர் அடையாளமிட்ட
நீலம் வாங்கி உபயோகியுங்கள்
விநியோகஸ்தர்கள்:
டொலர் கோப்பரேஷன்
14, டாம் வீதி, கொழும்பு.

# கோவா சரணுகதி அடைந்தது!

## இந்தியப் படைகள் வெற்றிவாகை சூடின

## நாலரை நூற்றுண்டு காலனி 36 மணி நேரத்தில் வீழ்ந்தது!

புதுடில்லி, டிச. 19

**கடந்த நாலரை நூற்றுண்டுகளாக போர்த்துக்கல் ஆதிக்கத்தின்கீழிருந்த கோவா, டையு, டாமன் ஆகிய பிரதேசங்கள் இன்று காலை இந்தியப் படைகளிடம் சரணுகதியடைந்ததைத் தொடர்ந்து, அநேகமாக இந்தியப் படையெடுப்பு அங்கு முடிவுற்றது. எல்லாவிடங்களிலும் அந்நியக் கொடிக்குப் பதில் இந்தியக் கொடிகள் வானளாவ உயர்தப்பட்டிருந்தன. கடல், விமானப் படையின் உதவியுடன் 30,000 வீரர்களைக் கொண்ட இந்திய ராணுவத்தின் 17-வது அணி 36 மணிநேரத்தில் 450 ஆண்டு காலனி ஆதிக்கத்தை வேரறுத்து வெற்றிவாகை சூடியது.**

**கோவாவின் தலைநகரான பஞ்சிமில், இந்தியத் தளகர்த்தர் லெப்டினண்ட் ஜெனரல் சௌத்ரியிடம் கோவா கவர்னர் ஜெனரல் சிறிய நிகழ்ச்சி யொன்றில் முறைப்படி சரணுகதியடைந்தார்.**

### 36 மணி நேரத்தில் காலனி ஒழிப்பு

இந்திய ராணுவம் 36 மணி நேரத்தில் போர்த்துக்கலின் காலனி ஆதிக்கத்தை நொறுக்கித் தள்ளிய சம்பவத்தை "திறமையான ஒரு ராணுவ சாதனை" எனக் கூறி, வெற்றிகொண்ட தம் புகழ்பெற்ற படைகளுக்கு பிரதமர் நேரு பாராட்டுத் தெரிவித்தார்.

இதேசமயம் கோவாவிலிருந்து இந்தியப்படைகள் வாபஸாக வேண்டுமென்ற மேற்கு நாடுகளின் தீர்மானமொன்றை பாதுகாப்புச் சபையில் ரஷ்யா "வீட்டோ" அதிகாரத்தைப் பிரயோகித்து முறித்தெறிந்தது.

### மேனன் நியூயோர்க் செல்கிருர்

கோவா, டையூ, டாமன் ஆகிய இடங்களில் இந்தியா மேற்கொண்ட நடவக்கைகளுக்கான நிலைமையை ஐ. நா. வில் விளக்குவதற்காக பாதுகாப்பு மந்திரி திரு. கிருஷ்ண மேனன் நியூயோர்க் சென்றுகொண்டிருக்கிருர். வழியில் பம்பாயில் அவரைச் சந்தித்த ரஷ்ய அதிபர் பிரங்னேவ், கோவாவில் வெற்றிவாகை சூடியதற்காக திரு. மேனனுக்குப் பாராட்டுத் தெரிவித்தார்.

### சரணுகதி

இன்று காலை நடைபெற்ற ஒரு சிறிய நிகழ்ச்சியில் முறைப்படி இந்தியத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சௌத்ரியிடம் கோவா கவர்னர் ஜெனரல் நடந்துவந்து சலாம் செய்தபின், "நாங்கள் உங்களிடம் சரணடைகிறேம்" என்று கூறினுர். "அப்படியே. உங்கள் துருப்புக்கள் உங்கள் முகாமிலேயே இருக்கட்டும். மற்ற ஏற்பாடுகள் பின்னுல் செய்யப்படும்" என ஜெனரல் சௌத்ரி பதில் அளித்தார். சர

(8-ம் பக்கம் பார்க்க)

### "ஊழியர்களிடம் வேற்றுமை கூடாது" —எ. பி.

மன்னுர், செவ்வாய்

மன்னுர் ரெயில்வே என்ஜினியரிங் தொழிலாளர் யூனியனின் வருடாந்த மகாநாடு, மன்னுர் ரெயில்வே நிலையத்துக் கருகாமையில் நடைபெற்றது. மகாநாட்டுக்கு, யூனியனின் தலைவர் திரு. பி. ஏ. ஏலாறின் தலைமை வகித்தார்.

இரண்டு வருட தகுதிக் காலத்தில் இருக்கும் ஊழியர்களை அரசாங்கம் நிரந்தரமாக்க வேண்டுமென்ற தீர்மானம் மகாநாட்டில் நிறைவேறியது.

மகாநாட்டில் மன்னுர்எம். பி. திரு. வீ. ஏ. அழகக்கோன் பேசுகையில் பின் வருமாறு குறிப்பிட்டார்: "ஊழியர்களிடம் முஸ்லிம், தமிழ், சிங்களம் என்ற ஜாதி சமய வேறுபாடுகள் இருக்கக்கூடாது. இப்படியான வேறுபாடுகள் இடம் பெறுமானுல், யூனியனில் பிளவு ஏற்படுவது மட்டுமின்றி ஊழியர்கள் தங்கள் கோரிக்கைகளையும் பெற முடியாமல் இருக்கும்."

### 5 சட்டவிரோதக் குடியேற்றக்காரர் கைது

மன்னுர், செவ்வாய்

சுமார் ஆறுமாதகால இடைவேளைக்குப் பின்னர் 5 சட்டவிரோத குடியேற்றக்காரர்கள் கைதுசெய்யப்பட்டனர். இவர்களில், மூவர் இலங்கையில் முன்னரே இருந்தவர்கள் என்று நம்பப்படுகிறது.

ராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட ஐந்து சட்டவிரோத குடியேற்றக்காரர்களும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

### பணம் திருப்பி கொடுக்கப்படுகிறது

மட்டக்களப்பு, செவ்.

வானவெளி வீரர் மேஜர் யூரி ககாரினின் விஜயத்தின் போது வரவேற்புபசாரங்களுக்குச் செலிடுவதற்கெனப் பொதுமக்களிடமிருந்து சேர்க்கப்பட்ட பணம், பெற்றுக்கொள்ளப்பட்டவர்களிடமே இப்போது திருப்பிக் கொடுக்கப்படுகிறதாம். வானவெளி வீரர் தனது மட்டக்களப்பு விஜயத்தை ரத்து செய்து விட்டார் என்னும் செய்தி கிடைக்கு முன்னரே மட்டக்களப்பிலுள்ள பள்ளிக்கூட மாணவர்கள் பந்தல்களை நிறுவியிருந்தார்களாம். வானவெளி வீரரை வரவேற்பதற்கென மட்டக்களப்பு உதவி வித்தியாதிபதியும் ஏனைய அதிகாரிகளும் ல ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள். மேஜர் ககாரின் தனது விஜயத்தை ரத்துச் செய்ததால் மட்டக்களப்பு வாசிகள் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளார்கள் எனத் தெரிகிறது.

### கப்பலில் 25 ஆடுகள் மடிந்தன

கொழும்பு, செவ்வாய்

சுமார் 200 க்கு அதிகமான ஆடுகளை ஏற்றிவந்த கப்பலொன்று கடந்த மூன்று நாட்களாக துறைமுகத்தில் நிற்கின்றது. இவற்றில் இதுவரை 25 ஆடுகள் தண்ணீர், உணவு இல்லாத காரணத்தால் மடிந்தன.

### கள்ளுத் தொழிலாளர் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது

கட்டுநாயக்கா, செவ்வாய்

கடந்த ஒன்பது நாட்களாக உடுபட்டவ என்னும் இடத்தில் நடைபெற்றுவந்த கள்ளுத் தொழிலாளரின் வேலை நிறுத்தம் முடிவடைந்தது. ஒரு கலன் கள்ளுக்கு 94 சதம் செலுத்தவேண்டும் என்றும் யூனியனுடன் ஒரு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவேண்டுமென்றும் அகில இலங்கை கள்ளுத் தொழிலாளர் யூனியன் கேட்டிருந்த கோரிக்கைகளுக்கு 'றெண்டர்' இணங்கி விட்டதாகத் தெரிய வருகிறது.

### மீன்பிடிக்கச்சென்றவர் திடீர் மரணம்

அம்பாறை, செவ்வாய்

கல்முனை—நாற்பிட்டிமுனை வீதியிலுள்ள கல்முனைக் குளத்தில் மீன் பிடிக்கச் சென்ற காளிக்குட்டி கணபதிப்பிள்ளை என்பவர் மயக்கமுற்று மரணமானுர்.

இவருடைய இனத்தவர், ஸ்தலத்துக்கு வந்து பார்த்தபொழுது, இறந்தவர் வீதியோரத்தில் கிடந்தார். எந்த விதமான வைத்திய உதவியும் அளிக்கு முன்னர் இவர் இறந்துவிட்டார் எனச் சொல்லப்படுகிறது. மரண விசாரணை நடைபெறவில்லை.

### உலகிலேயே மிகப்பெரும் பொதுத் தேர்தல்

புதுடில்லி, டிச. 19

இந்தியாவின் பொதுத் தேர்தல் பிப்ரவரி மாதம் 19-ம் திகதி முதல் 24-ம் திகதி வரை நடைபெறும். மொத்த வாக்காளர்கள் 21 கோடியாகும். சென்ற தேர்தலிலிருந்த வாக்காளர்களைவிட 17 லட்சம் பேர் வாக்காளர் பட்டியலில் இப்போது இடம்பெற்றுள்ளனர். கூடுதலாக இரண்டரை இலட்சம் வாக்குப் பதிவு நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. எந்த வாக்காளரும் தங்கள் வாக்கைப் பதிவுசெய்ய ஒரு மைலுக்கு மேல் நடக்க வேண்டியிருக்காது.

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## கணக்கு எழுதுபவர் தேவை

சரவணை, வேலணை மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு திறமைவாய்ந்த ஓர் கணக்கு எழுதுபவர் தேவை. விரும்பியவர் காரியதரிசிக்கு (25-12-61)க்குப் பிந்தாமல்விண்ணப்பம் செய்யவும். தெரிவு செய்யப்படுபவர் திறமைக்கேற்ப சம்பளம் கொடுக்கப்படும். சு. நமசிவாயம், காரியதரிசி சரவணை வேலணை மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், வேலணை.

## தேவை

5 வருட சேவை அனுபவமும் டழுதுபார்ப்பதில் அனுபவமும் பெற்ற சிலிண்டர் மெஷின் மைன்டர்கள் (Cylinder Machine Minders)தேவை. உடன் விண்ணப்பிக்கவும். 'ஈழநாடு' லிமிட்டெட், த. பெ. எண். 49, யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

பருத்தித்துறை விநாயகமுதலியார் றோட்டில் மூன்று பரப்பு வீட்டுக்குரிய நிலம் விற்பனைக்கு உண்டு. விளம்பரம்: S. S. தணிகாசலம், விநாயகமுதலியார்றோட்டு, பருத்தித்துறை.

# நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து தொழில் இலாகா அப்பீல்

யாழ்ப்பாணம், செவ்வாய்

சம்பளப் பதிவுப் புத்தகம் ஒப்படைக்கத் தவறியதாக இணுவிலைச் சேர்ந்த சுருட்டுத் தொழிற்சாலை சொந்தக்காரரான கே. இ வீரசிங்கம் என்பவர்மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் பதில் மாஜிஸ்ரேட் திரு. சி. சி. சோமசேகரம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கடந்த தவணையில் எதிரி கோர்ட்டில் ஆஜராகவில்லையாகையால் பகிரங்க வாரண்ட் அவர்மேல் பிறப்பிக்கப்பட்டிருந்தது. எதிரி இன்று இந்த விசாரணையின்போது கோர்ட்டில் சரண்புகுந்து குற்றத்தையும் ஒப்புக் கொண்டார்.

பதில் மாஜிஸ்ரேட் ரூ. 10 அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டதோடு இவர்மேல் தொடரப்பட்ட வேறு இரு வழக்குகளையும் தள்ளுபடி செய்தார்.

தொழில் இலாகா இத்தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்கின்றது. அத்துடன் அபராதத் தொகையை புனராலோசனை செய்யுமாறும் கோரியுள்ளனர்.

## கிரிக்கெட்

புதுடில்லி, டிச. 18

இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்குமிடையே நடைபெற்ற 3வது கிரிக்கெட் டெஸ்ட் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்ததாய் அறிவிக்கப்பட்டது. 4வது டெஸ்ட் கல்கத்தாவில் நடைபெறும்.

## உலகம் முழுமையும் பார்க்க வல்ல புதிய ராடார் கருவி

வாஷிங்டன், டிச. 17

அட்லாண்டிக், பெருங் கடல் தாண்டி அல்லது வேறு ஏதாவது தொலை தூரப் பாதையில் பறக்கும் விமானங்கள் அனைத்தையும் ஒவ்வொரு நிமிஷமும் நியூயார்க், லண்டன் மாநகரங்களில் உள்ள ராடார் கருவிகள் பார்த்தறியும் காலம் ஒருநாள் வந்தேதீரும்.

இயந்திரக் கோளாறு ஏற்பட்டு விமானம் நொறுங்கும் பட்சத்தில் விமானி தான் இருக்கும் இடம்பற்றி தகவல் கொடுக்க இயலாதிருந்தாலும் விமானம் துல்லியமாக எங்கிருக்கிறதென்று தெரிவித்து மீட்பு விமானத்தை உடனே அனுப்பக்கூடிய காலம் வரும்.

வாஷிங்டன் நகரிலுள்ள கடற்படை ஆராய்ச்சிக் கழகத்தல் தற்போது சோதிக்கப்பட்டு வரும் ஒரு சோதனை ராடர் வருங்காலத்தில் மேலே கூறியுள்ள நன்மைகளை விளைவிக்கக்கூடும்.

புதிய ரட்டர் கருவியை உருவாக்கியவர் ஆய்வு கூடத்தின் டைரக்டர் டாக்டர் எம்.பேஜ் புழக்கத்திலுள்ள ராடார் கருவிகளைப் போலல்லாமல் தனது பின் அலைகளை அயனி மண்டலத்தில் பட்டுத் தெறிக்குமாறு அனுப்புவதன் மூலம் அடிவானுக்கு அப்பால் உள்ளவற்றையும்புதிய ராடார் பார்க்கமுடியும்.

## சாம்பல்தீவு கி.ச. தேர்தல் முடிவுகள்

திருமலை, செவ்வாய்

சாம்பல்தீவு கிராமச்சபைத் தேர்தலில் முதலாம் வட்டார அங்கத்தவராக திரு. இ. போம்பலமும் 8-ம் வட்டார அங்கத்தவராக திரு. என். வல்லிபுரமும் தெரிவு செய்யப்பட்டனர்.

பின் வருவோர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்:-

வட்டாரம் 2- ஐ. நாகரத்தினம், வட்டாரம் 3- பி. இராசதுரை, வட்டாரம் 4- வீ. என். தம்பிராசா, வட்டாரம் 5- கே. சுப்பிரமணியம், வட்டாரம் 6- கே. செல்லத்துரை, வட்டாரம் 7- எஸ். குமாரசாமி.

# உணவுப் பிரச்சினை தீர மக்கள் உழைக்கவேண்டும்

— விவசாயமந்திரி

இரத்தினபுரி, திங்கள்

"எங்கள் அரசாங்கம் வங்குரோத்து அடைந்துவருவதாக எங்களைக் கண்டிப்பவர்கள் கூறிவருகிறார்கள். பொருளாதாரப் பிரச்சினைகள் இலங்கைக்குமட்டும் உரியவையல்ல; உலகம் முழுவதற்குமே உரியவை. இலங்கையில் பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொறுப்பு இலங்கை மக்களிடம்தான் தங்கியுள்ளது" என்று காணி விவசாய அமைச்சர் திரு. ஸி. பி. டி' சில்வா இரத்தினபுரி சீவாலி மகாவித்தியாலயத்தில் இரத்தினபுரி இளம் விவசாயிகள் சங்கக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

"ஒருநாளைக்கு ஒவ்வொருவரும் கால்மணி நேர வீதம் மேலதிகமாக உழைத்தால் நாட்டின் உணவுப் பிரச்சினையையும் பொருளாதாரப் பிரச்சினையையும் தீர்த்துவிடலாம். அதிக ஊதியமும் குறைந்த உழைப்பையுமே மக்கள் விரும்பினல் நாங்கள் ஆதாளபாதாளத்தை நோக்கித்தான் செல்வோம்'' என்று மந்திரி சில்வா கூறினர். அவர் மேலும் கூறியதாவது:—

"தொகுதி விவசாயப் பண்ணைகளை ஏற்படுத்துவதற்கான திட்டத்தை திரு டட்லி, திரு, பிலிப் ஆகியோர் எதிர்த்தாலும் பார்லிமெண்டில் இத்திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இப்புதிய திட்டத்தின்மூலம் பலருக்கு வேலை வாய்ப்பு ஊதியமும் கிடைப்பதோடு விவசாயமும் வளர்ச்சியுறும்.

நெற்காணிச் சட்டம் நாடு பூராவும் அமுல்நடத்தப்படும். விவசாயிக்கு போதுமான பாதுகாப்பளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது."

## பனங்காமம் கி. ச. தேர்தல் முடிவுகள்

மன்னர், செவ்வாய்

பனங்காமம் கிராமசபைத் தேர்தல் முடிவுகள் வருமாறு:-

1-ம் வட்டாரம்- முத்துக்குமாரு செல்லத்துரை, 2-ம் வட்டாரம்- இளையதம்பி அருணசலம், 3-ம் வட்டாரம்- ஏரம்பு சுப்பிரமணியம் (போட்டியின்றித் தெரிவு), 4-ம் வட்டாரம்- ஞானசேகரம் குமாரசாமி (போட்டியின்றித்தெரிவு), 5-ம் வட்டாரம்- பெரியதம்பி பொன்னுத்துரை, 6-ம் வட்டாரம்- சுப்பையா தம்பித்துரை, 7-ம் வட்டாரம்- அருணசலம் ஆறுமுகம் (போட்டியில்லை) 8-ம் வட்டாரம்- சூரியர் தம்பையா (போட்டியில்லை), 9-ம் வட்டாரம்- பரமு சோமு (போட்டியில்லை).


## சின்னுலைப்பட்டு சேலைகள்

டொம் டொம் செக் (சாரம்) போட்டவை

கொஞ்சச் சரக்கே கைவசம் உண்டு
ஆகவே விரைவில் உங்கள் தெரிவுகளை
தெரிந்தெடுங்கள்

சாதாரண விலை 22-50
விற்பனை விலை 17-50

டயரும்ஸ், யாழ்ப்பாணம்

18


# முல்லைத்தீவு ஆஸ்பத்திரிக்கு மின்சார வசதி

முள்ளியவளை, திங்கள்

முல்லைத்தீவுப் பட்டினத்துக்கு மின்சாரம் வந்து பல வருடங்களாகியும் இதுவரை காலமும் அங்குள்ள ஆஸ்பத்திரிக்கு மின்சார வசதி கிடைக்காமல் இருந்து வந்தது இதுபற்றி வவனியாப் பிரதிநிதி திரு. தா. சிவசிதம்பரம் பாராளுமன்றத்தில் பேசுகையில், 'மண்ணெண்ணை விளக்கு வெளிச்சத்தில் அங்கு சத்திர சிகிச்சை நடைபெறுகிறது' எனக் குறிப்பிட்டிருந்தார்.

எம். பி. உரிய அதிகாரிகளைச் சந்தித்து வற்புறுத்தியதன் பயனுக, ஆஸ்பத்திரி வார்டுகளுக்கு மின்சார இணைப்பு வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

ரூ. 9,000 செலவில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் இவ் வேலைகள், வருகிற பெப்ரவரியில் முடிவடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 21 மணிநேர ரயில் பிரயாணம்!

மட்டக்களப்பு, செவ்வாய்

கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து கடந்த புதன் கிழமை இரவு கிளம்பிய மெயில் வண்டியில் பிரயாணஞ் செய்த 300 பேர் அது மட்டக்களப்பை வந்து அடைவதற்கெடுத்த 21 மணித்தியாலங்களிலும் அப்புகையிரதவண்டிக்ள்ளேயேகு கழிக்கவேண்டியேற்பட்டது. இந்த மாதம் யாழ்ப்பாண புகையிரதம் மகோவுக்கு அருகில் தடம் புரண்டதனல் நடைபெற்றுக் கொண்டிருந்த பாதை சீர்திருத்தத்தினல் ஏற்பட்டது.

சாதாரணமாக கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு வரும் மெயில் வண்டி 10 மணித்தியாலங்களே எடுக்கும். நெகலுகமா புகையிரத நிலையத்தில் அனவசியமாக ஏற்பட்ட இத்தாமதம் பற்றி பிரயாணிகள் காரணம் தெரியாதிருந்தனர்.

## கொழும்பில் ஜெர்மன் உதவிப்பிரதமர்

கொழும்பு, செவ்வாய்

ஜெர்மன் குடியரசின் உதவிப் பிரதமரும் சுகாதார அமைச்சருமான திரு. மேக்ஸ் செப்ரின் சென்ற ஞாயிற்றுக் கிழமையன்று இலங்கை வந்துள்ளார்.

கொழும்பு உதவி மேயர் திரு. நந்தசேனகூரே ரத்மலானை விமான நிலையத்தில் திரு. செப்ரினுக்கு மாலையிட்டு வரவேற்பர். முக்கியஸ்தர்கள் பலர் ஜெர்மன் அமைச்சரை வரவேற்மதற்கென ரத்மலானை விமான நிலையத்துக்குச் சென்றிருந்தனர். இலங்கையிலுள்ள ரஷ்ய ஸ்தானிகர் திரு. என். வை. தராக்கா னேவ்வும் அரசாங்க அதிகாரிகள் பலரும் திரு. மேக்ஸ் செப்ரினை வரவேற்றனர்.

## உப்புவெளி கி.ச. தேர்தல் முடிவுகள்

திருமலை, திங்கள்

உப்புவெளி கிராமசபையின் தேர்தலில் ஒருவருக்கு 4வாக்குகள் மாத்திரம் கிடைத்ததால் அவர் கட்டுப்பணத்தை இழந்தார்.

இத்தேர்தலில் (மூன்றும் நாலாம் ஆறும் வட்டாரங்களுக்கு முறையே திருவாளர்கள் கே. கதிர்காமர், என். கைலைநாதன், எஸ். பொன்னையா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

1-ம் 2-ம் 5-ம் வட்டாரங்களுக்கு முறையே திருவாளர்கள் பி. கதிர்காமத்தம்பி, எஸ். ஆண்டி, எம். அப்பொன்சோ ஆகியோர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர்.


நத்தார் திருநாளை முன்னிட்டு

# ரொலறம்ஸ்

இலவசம்!
ரூபா 5 பெறுமதியான
ஜேர்மன்
பவுண்டன் பேனு.



மலிவு
விற்பனை



டிசம்பர் 18-ந் திகதி தொடக்கம்
24-ந் திகதி வரை மாத்திரம்

ரூபா 50க்கும் அதற்கு மேலும் பிடவைகள்
வாங்குபவர்களுக்கு இலவச பரிசளிக்கப்படும்.

எங்களுடைய மலிவு விற்பனையில் பலரகமான
பிடவைத் தினுசுகளைப் பார்வையிடலாம்.

ரொலறம்ஸ்

யாழ்நகரில் பிரபல்யமான பிடவை ஸ்தாபனம்

46, பெரிய தெரு, — யாழ்ப்பாணம்.

# அடெலலாவை சந்திக்க ஷோம்பே புறப்பட்டார்!

## எலிஸபெத்வில்லியில் ஐ. நா. துண்டுப்பிரசுரங்கள்

நியுயோர்க், டிச. 19

கடாங்கா அதிபர் ஷோம்பேயும் காங்கோ பிரதமர் அடெளலாவும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தும் பொழுது கடாங்காவில் நிபந்தனையுடன் கூடிய சண்டை நிறுத்தத்துக்கு ஐ. நா. தற்காலிக தலைமைக் காரியதரிசி யு தாண்ட் உத்தரவிட்டுள்ளார்.

ஐ. நா. படைகள் தாக்கப்பட்டால் தற்காப்புக்காக திருப்பித் தாக்குவதற்கு ஐ. நா. படைகளுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

எலிஸபெத்வில்லியில் ஐ. நா. வின் நோக்கம் நிறைவேறுவதற்கும் திரு. ஷோம்பே—அடெளலா சந்திப்புக்கு உறுதியான ஏற்பாடுகள் செய்யப்படவேண்டுமென்பதுதான் சண்டை நிறுத்தத்துக்கான நிபந்தனையாகும்.

ஷோம்பேயும் அடெளலாவும் சந்தித்துப்பேசும்பொழும் சண்டை நிறுத்தத்துக்கான உடன்படிக்கையை அமுல் நடத்துவதற்கும் தயாராக இருக்கிறதாம்.

## ராணுவ நடவடிக்கை

ஜாகர்த்தா, டிச. 18

மேற்கு நியுகினியை டச்சு ஆதிக்கத்திலிருந்து விடுதலை செய்யும் ராணுவ நடவடிக்கையை இந்தோனேஷிய ஜனதிபதி சுகர்னோ சீக்கிரம் பிரகடனம் செய்வாரெனத் தெரிகிறது.

---

## பொங்கல் விழா

பதுளை, திங்கள்

அரிசிப்பத்தனைத் தோட்ட மூன்ரும் டிவிஷன் திருவள்ளுவர் மாணவ மன்றத்தினர் இம்முறை பொங்கல் விழாவை வெகு விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்துள்ளனர். பேச்சு, மல்யுத்தம், சிலம்பம், நாடகம் ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன என மன்றப் பொறுப்பாளர் அறிவிக்கிறர்.

# மாலையும் இளநீரும்

## பாரதத்துருப்புக்களுக்கு கோவாமக்கள் கொடுத்தனர்

பம்பாய், டிச. 19

கோவாவுக்குள் முன்னேறிச் சென்றுகொண்டிருக்கும் பாரதத் துருப்புக்களுக்கு பொதுமக்கள் மாலைசூட்டி வரவேற்று இளநீரும் பருகக் கொடுத்து உபசரித்தனர்.

போர்ச்சுக்கீஸியர் புதைத்து வைத்திருந்த கண்ணி வெடிகளையும் மற்றும் அவர்கள் மறைத்து வைத்திருந்த ஆயுதங்களையும் பொதுமக்களே பாரதத் துருப்புக்களை அழைத்துச் சென்று காட்டிக்கொடுத்தனர்.

போர்ச்சுக்கீஸியர் சிலஇடங்களில் பாலங்களை உடைத்துவிட்டதால் கோவானிய படகுக்காரர்கள் பாரதத் துருப்புக்களை தங்கள் படகுகளில் ஏற்றிச்சென்று உதவிபுரிகின்றனர்.

### சிறைப்பிடிக்க உத்தரவு

ஆபிரிக்காவிலுள்ள போர்த்துக்கலின் இதர ஆதிபத்திய நாடுகளிலுள்ள இந்தியப் பிரஜைகளைக் கைதுசெய்யுமாறு போர்த்துக்கல் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

கிழக்காபிரிக்காவிலுள்ள இந்தியர் தாங்கள் நியாஸாலந்தில் குடியேறுவதற்கு அனுமதி கோரியுள்ளனர்.

---

## ககாரின் நன்றி

டாஷ்கெண்ட், டிச. 18

இந்தியா இலங்கை ஆப்கனிஸ்தான் ஆகிய இடங்களில் தான் சந்தித்த மக்கள் அனைவரும் தம்மை நன்கு உபசரித்ததாகவும் சோவியத் ரஷ்யாவின் விஞ்ஞான் சாதனைகளை நன்கு பாராட்டியதாகவும் அந்த நாடுகளுக்குச் சென்றுவிட்டு திரும்பி வந்துள்ள வானவெளிவீரர் மேஜர் யூரி ககாரின் கூறியுள்ளார்.

சோவியத் விஞ்ஞானத்தையும் தொழில் நுட்பத்தையும் இந்த நாட்டு மக்கள் பாராட்டியுள்ளதாகவும் ரஷ்ய மக்களுடன் தமக்கு உள்ள நட்புறவை காட்டியதாகவும் ரஷ்யாவின் சமாதானப் போராட்டத்துக்குத் தமது ஆதரவை அவர்கள் தெரிவித்ததாகவும் மேஜர் யூரி ககாரின் தெரிவித்தார்.

பாரதப்பிரதமர் திரு. நேருவுக்கும் இலங்கைப் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கும் ஆப்கானிஸ்தான் மன்னருக்கும் மேஜர் ககாரின் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

# பத்திரிகைநேசியமசோதாவை வாபஸ்பெறக் கோரிக்கை

## சனசமூக நிலையம் தீர்மானங்கள்

கோப்பாய், செவ்வாய்

ஜனநாயக அடிப்படை அம்சங்களிலொன்ருன பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிக்கும் "பத்திரிகைத் தேசிய மசோதா"வை உடனடியாக வாபஸ்பெற வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்று கோப்பாய் சூரியோதைய சனசமூக நிலையத்தின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந் நிலையத்தின் கூட்டம் திரு. க. நா. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. இந் நிலையத்தின் 18வது வருடாந்தப் பொதுக் கூட்டத்தை ஜனவரி 7ம் திகதி கோப்பாய் கிராமச் சங்கத் தலைவரும் நிலையத்தின் போஷகருமான திரு. கே. இராசரத்தினத்தின் தலைமையில் கொண்டாடுவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

பின்வரும் தீர்மானங்களும் அங்கு நிறைவேற்றப்பட்டன.

சூரியோதய சனசமூக நிலையத்தின் தாபகரும் முன்னள் காரியதரிசியுமான கவிஞர் மு க. சூரியனை கௌரவிக்க ஏற்பாடு செய்வது.

அரசாங்கம் கதிர்காமத்தைப் புனித நகரமாக்கும் முயற்சியால் அங்குள்ள மடங்களை அகற்ற முயல்வதன் மூலம் ஆலயத்திற்குச் செல்லும் யாத்திரீகர்களின் வசதிகளைல குறைப்பது மட்டுமன்றி ஆக்யத்தின் புனிதத் தன்மையே சிதைப்பதாகும். பல இன மத மக்களும் தரிசிக்கும் தலமான கதிர்காம மடங்களை அகற்ற வேண்டாமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வது.

ஒரு கிராமச் சபைக்குட்பட்டதும், நன்னிலையில் இயங்குவனவுமான மூன்று சனசமூக நிலையங்களுக்கே இனிமேல் அரசாங்க நன்கொடைப்பணம் கொடுக்கப்பட வேண்டுமென்ற தலத்தாபனப் பகுதியின் திட்டத்தினுல், பொருளாதாரத்தில் பின்தங்கிய சனசமூக நிலையங்கள் பெரிதும் பாதிக்கப்படுமாகையால், இத்தகைய திட்டத்தை நீக்கிவிடுமாறு தலத்தாபன மந்திரியைக் கேட்டுக்கொள்வது.

# கடாங்காவில் சண்டை நிறுத்தம்

லியப்போல்ட்வில்லி, டிச. 19

காங்கோ மத்திய அரசாங்கப் பிரதமர் திரு. அடுலாவைச் சந்திக்க கடாங்கா அதிபர் ஷோம்பே சம்மதம் தெரிவித்ததைத் தொடர்ந்து கடாங்காவின் தலைநகரான எலிஸபெத்வில்லியில் ஐ. நா. படைகளுக்கும் கடாங்கா படைகளுக்குமிடையில் நடைபெற்று வந்த சண்டை தற்காலிகமாக ஓய்ந்துள்ளது.

திரு. அடுலாவைச் சந்திப்பதற்காக திரு. ஷோம்பே வடக்கு ரொடிஷியாவிலுள்ள என்டோலா என்ற இடத்திற்குச் சென்றுள்ளார். இங்கிருந்து லியப்போல்ட்வில்லியிலுள்ள அமெரிக்கத் தூதர் திரு. ஷோம்பேயை லியப்போல்ட்வில்லிக்கு அருகிலுள்ள கித்தோனு என்ற இடத்துக்கு அழைத்துச் செல்வார். இங்கு திரு. அடுலாவை திரு. ஷோம்பே சந்தித்துப்பேசுவார்.

### துண்டுப்பிரசுரங்கள் விநியோகம்

கடாங்காவின் தலைநகரான எலிஸபெத்வில்லியின் மத்திய பகுதிக்கு ஐ. நா. துருப்புக்கள் நேற்றுப் பிரவேசித்தன. ஐ. நா. படைகள் அங்கு துண்டுப்பிரசுரங்களையும் விநியோகித்தன.

"காங்கோவின் ஐக்கியத்தை உறுதிப்படுத்தவும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட காங்கோலிய அரசாங்கத்தின் கோரிக்கையின்மீது நாங்கள் இங்கு வந்திருக்கிறேம். கடாங்காவிலுள்ள கூலிப்பட்டாளத்தினரும் மற்றும் சிலரினதும் நடவடிக்கைதான் எங்களைப் பலாத்காரத்தில் ஈடுபடச் செய்தது. அந்நிய கூலிப்பட்டாளத்தினரையும் அந்நிய அதிகாரிகளையும் இங்கிருந்து அகற்றி 'காங்கோ காங்கோலியர்களுக்கே' என்பதை நிலைநாட்டவே இங்கு நாங்கள் வந்திருக்கிறேம்" என்று அத்துண்டுப் பிரசுரத்தில் தெரிக்கப்பட்டிருந்தது.

## கோவாவுக்கு நிர்வாக அதிகாரி

சென்னை, டிச. 17

திரு. நொரோன்ஹா ஐ. ஸி. எஸ். கோவாவில் நிர்வாக அதிகாரியாய் நியமிக்கப் பட்டிருப்பதாயும், அவர் இப்போது பெல்காமுக்குச் சென்றுகொண்டிருப்பதாயும் நபகமாகத் தெரியவருகிறது.

மைசூர் உள்நாட்டு இலாகா காரியதரிசி திரு. டி. ஆர். ஜயராமன், கோவாவுக்கு கலெக்டராக நியமிக்கப் பட்டிருப்பதாயும் தெரிகிறது.

# உணவு இன்ஸ்பெக்டர் தாக்கல் செய்த வழக்கில் எதிரி விடுதலை

## சாட்சியம் திருப்தியில்லையாம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

சுகாதாரத்துக்குக் கேடுவிளைவிக்கக்கூடியதாக எழுபத்தைந்து மாட்டுத்தோல்களை சின்னக்கடை நாலாவது இலக்க மாட்டிறைச்சிக் கடைக்குள் வைத்திருந்ததாக எஸ். அலெக்சாண்டர் என்பவர்மீது குற்றஞ்சாட்டி யாழ்ப்பாணம் உணவு இன்ஸ்பெக்டர் திரு. எஸ். ஆறுமுகத்தினுல் யாழ்ப்பாணம் மாஜிஸ்ரேட் கோர்ட்டில் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

திரு. வி. நடராசாவுடன் திரு எஸ். ஆறுமுகம் முடிக்குரிய தரப்பில் ஆஜரானர்.

திரு. சாம் ஏ. சபாபதி, திரு அல்பிரட் டி. துரையப்பாவின் துணையுடன் எதிரி தரப்பில் ஆஜரானர்.

திரு. எஸ். ஆறுமுகத்தின் சாட்சியத்தோடு முடிக்குரிய தரப்பு விசாரணை முடிவுற்றது. எதிரிதரப்பில் ஆஜரான திரு. சாம் ஏ. சபாபதி பின்வருவனவற்றை கோட்டாருடைய கவனத்துக்குக்கொண்டு வந்தார்:-

நாலாவது இலக்க மாட்டிறைச்சிக்கடை மூடப்பட்டிருக்கிறது. அதனை அக்கடைக்காரர் இப்பொழுது உபயோகிப்பதில்லை. தற்காலிகமாகவே அந்த மாட்டுத்தோல்கள் அதற்குள் வைக்கப்பட்டிருந்தது. அதனல் அது எவருக்கும் தொந்திரவு விளைவிக்காது, அவர் இதற்கான சட்டப் பகுதிகளை எடுத்துக்காட்டினர்.

இவ்வழக்கை விசாரணை செய்த பதில் மாஜிஸ்ரேட் திரு. சி. சி. சோமசேகரம் சாட்சியங்கள் போதாதெனத் தெரிவித்து வழக்கைத் தள்ளுபடி செய்து எதிரியை விடுதலை செய்தார்.

# பத்திரிகையை

## அரசாங்கம் பொறுப்பேற்பது ஜனநாயகத்துக்கு கேடுவிளைவிக்கும்

மாத்தளை, செவ்வாய்

'அரசாங்கத்துக்கும் பொதுமக்களுக்குமிடையில் இரும்புத்திரை போடுவதற்கு பொருத்தமானதொரு வழி தேசிய பத்திரிகைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்வதுதான்' என மாத்தளை நகரசபையின் மாதாந்தக்கூட்டத்தில் பேசிய திரு. வி. பி. விஜயசேன தெரிவித்தார்.

நகரசபைத் தலைவர் திரு. டி. தம்பிருஜா தலைமையின் கீழ் நடைபெற்ற கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பத்திரிகைகளை எடுக்கும் திட்டத்தை ஆட்சேபித்து திரு. விஜயசேன கொண்டுவந்த பிரேரணை ஒன்றின் மீது பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் இதுபற்றிப் பேசியதாவது:

தற்கால ஜனநாயக ஆட்சியில் பத்திரிகைகள் ஒரு பிரதான இடம் வகிக்கின்றன. எனவே பத்திரிகைகளின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தி அரசாங்கம் பொறுப்பேற்பது மிகவும் கொடுமையானதொன்ருக இருக்கும்.

பொது மக்களிடமிருந்து எதையோ மறைப்பதற்கு எண்ணும் அரசாங்கமே இவ்விதம் பத்திரிகைளைப் பொறுப்பேற்க எண்ணுகிறது. இது சர்வாதிகாரப் பாதையில் சொல்லும் அரசாங்கத்தின் கொள்கையாக இருக்கிறது.

பாரதப்பிரதமர் திரு. நேருகூட பத்திரிகை சுதந்திரம் பாதுகாக்க வேண்டுமென விரும்புகிருர்? இதை எதிர்த்துப் பேசிய திரு. பி. பி. எக்கநாயக்கா கூறுயதாவது:

கடந்த தேர்தலின்போது தாம் விரும்பும் கட்சியை ஆட்சி பீடத்தில் அமர்த்துவதற்காக பத்திரிகைகள் செய்திகளைத் திரித்துக் கூறின. எனவே அரசாங்கம் பத்திரிகைகளைப் பொறுப்பேற்பதால் பெரிய கெடுதல் ஒன்றும் ஏற்பட்டுவிடாது. பிரேரணையை ஆதரித்து 5 பேரும் 3 பேர் எதிர்த்தும் வாக்களித்தனர்.

பிரதமமந்திரிக்கு இத்தீர்மானத்தின் பிரதியொன்று அனுப்புவதென சபையில் தீர்மானிக்கப்பட்டது.

---

பங்களூர், டிச. 19

மலாயா மன்னரும் ராணியும் இன்று பங்களூர் வந்து சேர்ந்தனர். மைசூர் கவர்னர் முதன்மந்திரி ஆகியோர் அவரை விமானநிலயத்தில் வரவேற்றனர்.

"நவ்ரங்" சேலைகள்

இந்தியாவின் முதல்தர தயாரிப்பு!

பங்களூர் சத்தான் சில்க் சேலைகள்
நீலம் / வெள்ளை, பிங் / வெள்ளை,
ஒறஞ்சு / வெள்ளை, கோல்ட் / வெள்ளை,
ஒறஞ்சு / கோல்ட், நீலம் / கோல்ட்
மற்றும் பலவித டிசைன்களிலும்
உள்ளன

ரூபா 31-50 மாத்திரம்

டயரும்ஸ் யாழ்ப்பாணம்

15

### மணி வாக்கு

வாழ்வு உண்மையானதாக இருக்க வேண்டுமானால் அதனை மதமாகிய அத்திவாரத்தில் அமைத்தல் வேண்டும்.

—காந்திஜி


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு மார்கழி மீ 5உ (20 12-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## சமூகத் துரோகம் வேண்டாம்

கொழும்பு துறைமுகத் வேலை நிறுத்தம் காரணமாக மீண்டும் விலைவாசிகளெல்லாம் திடீரென உயர்ந்துவிட்டன. சாதாரண குடும்பத்தினர், வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்து மிகவும் சங்கடப்படுகின்றார்கள். ஏற்கெனவே கையிலிருப்பிலிருந்த அத்தியாவசிய சாமான்கள் பல பதுக்கப்பட்டுவிட்டதாயும், இந்த நெருக்கடியான கஷ்ட காலத்திலே கொள்ளை லாபமடிக்கச் சிலர் திட்டம் போட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

நாட்டில் ஏற்படும் நெருக்கடியான நிலைமையைத் தங்கள் சுயநலத்துக்காகப் பயன்படுத்திக் கொண்டு, பொதுமக்களைப் பலவித இம்சைக்கும் உள்ளாக்குவது சமூகத் துரோகமாகும். பணம்தான் அவர்களுக்குப் பிரதானம். எப்படியாவது, அதிக பணத்தை அதிக சீக்கிரத்தில் சம்பாதித்துவிட்டால் போதுமென்பது அவர்கள் நோக்கம். இதற்கான சந்தர்ப்பங்களுக்காக அவர்கள் ஆவலுடன் காத்திருக்கிறார்கள். சாமான்களைப் பதுக்கி வைத்து, செயற்கைப் பஞ்சத்தையும் ஏற்படுத்தி, கொள்ளை லாபம் தட்டுகிறார்கள். இப்படிச் செய்பவர்கள் பொதுமக்களுக்கு மட்டுமன்றி தங்களுக்கும், பொதுவாக சுதந்திர வர்த்தகத்துக்குமே தீங்கு செய்து கொண்டவர்களாவர்.

ஒரு சிலர் செய்யும் இவ்வித தீச்செயல் காரணமாக பொதுவாக வியாபார சமூகத்துக்கே கெட்ட பெயர் ஏற்படுவதாக இருக்கின்றது. இவ்வித கொள்ளை லாபம் அடிக்கக் கூடாதென்று வர்த்தகர் சங்கங்கள் தங்களுக்குள் கட்டுப்பாடு செய்து தீர்மானிப்பதுடன், இவ்விதிக்கு மீறி நடப்பவர்களைக் கண்டித்து அம்பலப்படுத்த வேண்டும். பொதுஜன நன்மையைக் கருதி இவ்விதம் அவர்கள் செய்வார்களானால், பொதுமக்களின் அமோகமான நல்லெண்ணத்தையும் நன்றியையும்பெறுவர். சுதந்திரமான வர்த்தகம் நீடித்திருக்கவும் முடியும். இன்றேல், வர்த்தகம்கூட்டுறவுச்சங்கக் கடையின் ஏகபோக உரிமையாக்கப்பட்டுவிடவும்கூடும்.

அரசியல் சதுரங்கம் காரணமாக இலங்கையில் அடிக்கடி நெருக்கடிகள் ஏற்படுகின்றன. ஒவ்வொரு நெருக்கடியிலும் சிலராவது லட்சப் பிரபுக்களாகப் பார்க்கின்றனர். நெருக்கடிகள் ஏற்பட அனுமதித்துவிட்டு, பின்னர் விலைக்கட்டுப்பாடு, தண்டனை முதலிய நடவடிக்கைகளை எடுப்பது தும்பைவிட்டு வாலைப்பிடித்த கதைபோலாகும். அரசியல் தலைவர்களுக்கு பொது மக்கள் நலத்தில உண்மையிலே அக்கறையிருப்பின் நெருக்கடிகள் கூடுமானவரை ஏற்படாமல் தடுப்பதுடன், ஏற்பட்டுள்ள நெருக்கடியை பரஸ்பரம் விட்டுக்கொடுத்து விரைவில் தீர்க்க வேண்டும். நெருக்கடி நீடிக்க நீடிக்க மக்களின் சங்கடங்களும் அதிகரிக்கக் காரணமாகின்றது.

# யு. என். பி. யிடம் வகுப்புவாதம் இல்லையாம்!

## டட்லி கூறுகிறார்

### சுதந்திரக் கட்சியின் 'சாதனைகள்' பற்றி விளக்கம்

சிலாபம், செவ்வாய்

'பொய்யான வாக்குறுதிகள், வீணான செலவுகள், சகல விவகாரங்களிலும் குழப்பமான சூழ்நிலை இவைதான் சுதந்திரக் கட்சியின் உயர்ந்த சாதனைகள்' என இங்கு நடைபெற்ற யு. என். பி. கூட்டத்தில் பேசிய திரு. டட்லி சேனநாயகா குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசியதாவது:

'நிதி நிலைமை சீராக இருப்பதாக சுதந்திரக்கட்சி பொது மக்களை இதுவரை ஏமாற்றி வந்தது. ஆனால் இப்பொழுது உண்மையான நிதிநிலைமை மறைக்கமுடியாது எடுத்துக் கூறவேண்டி வந்துள்ளது.

வீணான செலவுகளால் நிதி நெருக்கடி ஏற்படப்போகின்றது என நான் அரசாங்கத்தை பலமாதங்களுக்கு முன்னர் எச்சரிக்கை செய்திருந்தேன். அப்பொழுது அவர்கள் என் கருத்தை அசட்டை செய்தார்கள். ஆனால் இப்பொழுது தான் உணர்ந்துள்ளார்கள். பொது மக்களுக்கு தான் அனுபவிக்கும் கஷ்டங்களை உணரத் தொடங்கியுள்ளனர். இது ஆரம்பமே, இன்னும் கஷ்டங்கள் பல தொடர இருக்கின்றன.

#### வரிப்பளு

இங்குள்ள மக்கள் வரிச் சுமையைத் தாங்க முடியாது அவதிப்படுகின்றனர். எந்த விதமாக அரசாங்கத்தைக் கொண்டு செலுத்தலாமென அறியாத அரசாங்கம் தாம் உருவாக்கிய சூழ்நிலையை தாமே சமாளிக்க முடியாது தவிக்கின்றது. இதனால் சாதாரண மனிதனை அரசாங்கம்தாக்கத் தொடங்கியுள்ளது. இன்னும் புதிய வரிகளை விதிக்க அரசாங்கம் ஆலோசனைசெய்து வருவதாகத் தெரிகிறது.

#### வாழ்க்கைச் செலவு

வாழ்க்கைச் செலவு ராக்கெட் வேகத்தில் நாளுக்கு நாள் உயர்ந்து செல்கிறது. இன்றைய ஒரு ரூபாவின் பெறுமதி முன்னையதிலும் பார்க்க அரைவாசி குறைந்துள்ளது. வெளி நாடுகளில் சந்தைகளை உருவாக்க யு. என். பி. யால் எடுத்துக்கொண்ட நல்ல முயற்சி இப்பொழுது டா..டிக்கப்பட்டுள்ளது.

சம்பள வெட்டு செய்யப்பட்டுள்ளதாக தொழிலாளர் முறையிட்டுள்ளனர். பசி, பிணி, பற்றுக்குறை இவற்றால் அவதிப்படுவதாக தொழிலாளர் குறைபட்டு அரசாங்கத்திடம். உதவிநாடினர் இவற்றுக்கெல்லாம் செவிசாய்க்கவில்லை. இந்தக் கூக்குரல் கேட்டு அரசாங்கம் விழித்துக்கொள்ளவில்லை.

#### இறுக்கம் அதிகரிக்கிறது

வயிற்றை இறுக்கிக்கொள்ளுமாறும் தியாகம் செய்யுமாறும் அரசாங்கம் பொது மக்களுக்கு மேடைப்பேச்சு மூலம் கூறிவந்துள்ளது. இத்தனைக்கும் தாம் மட்டும் சுகம் அனுபவித்து வந்துள்ளார்கள். அரசாங்கத்திலுள்ளவர்களது வெளியூர் உல்லாசப் பிரயாணங்களும் தொடர்ந்து நடைபெற்று வந்துள்ளது. அரசாங்கம் செயல் படுத்தும் பெரிய திட்டங்களெல்லாம் யு.என்.பி. யால் ஆரம்பிக்கப்பட்டவையே.

அனுராதபுரத்தில் விமான நிலையம் ஆரம்பித்ததொன்றே அரசாங்கம் செய்த வேலை. இது திரு. மைத்திரிபால சேனநாயகா கொழும்பிலிருந்து அனுராதபுரத்துக்கும், அனுராதபுரத்திலிருந்து கொழும்புக்குத் திரும்பவும் விமானம் மூலம் பிரயாணம் செய்ய வாய்ப்பளித்துள்ளது. இந்த விமான நிலையம் ஆரம்ப நாளன்று அரசாங்கம் ரூ. 25,000 செலவிட்டது. ஆனால் இதனால் பெற்ற வருமானமென்ன? ஒன்றுமேயில்லை

வேலையில்லாத் திண்டாட்டம் ஆதிகரித்து வருகிறது. இதைத் தீர்ப்பதற்கு மகாவலி கங்கையை யாழ்ப்பாணத்துக்கு திருப்புவதாக அரசாங்கம் கூறுகிறது. இந்தப்பொய்யான திட்டத்தால் ஒருவிதபயனுமில்லை.

#### வகுப்புவாதமில்லை

யு. என். பி. வகுப்புவாதக் கொள்கையில் நம்பிக்கை வைத்துள்ளதாக சிலர் தவறாக எண்ணியுள்ளார்கள். 25 வருடகால அரசியல்வாழ்வில் நானொருபோதும் அவ்வெண்ணம் கொண்டிருக்கவில்லை. யு. என். பி.யிலுள்ள எந்த ஒரு அங்கத்தவராவது இவ்வித வகுப்புவாதக் கொள்கையில் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. மார்ச் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலின் பின்னர் யு. என். பி. சமஷ்டிக் கட்சியிடம் ஆதரவு தருமாறும் கோரியபோது சமஷ்டிக்கட்சி தனது 4 அம்சக் கோரிக்கையை எம்மிடம் சமர்ப்பித்தது. அவை ஏற்கமுடியாதவையாக இருந்தமையால் நான் அவற்றை நிராகரித்தேன்.

பண்டாரநாயகா—செல்வநாயகம் ஒப்பந்தத்தை ஏழுமாதங்களாக எதிர்த்த ஒரே கட்சி யு. என். பி. தான். சுதந்திரக் கட்சி சமஷ்டிக்கட்சியுடன் இவற்றுக்கு சம்மதம் தெரிவித்து இரகசிய பேச்சு வார்த்தைகள் நடத்தி வந்துள்ளன. இதை திரு. செல்வநாயகம் சமீபத்தில் பார்லிமென்டில் ஒப்புக்கொண்டார்.

இலங்கையை உருவாக்க வேண்டும். சிங்களவராகஇருந்தாலும், தமிழராக இருந்தாலும், முஸ்லிமாக இருந்தாலும், பறங்கியராக இருந்தாலும் எவரும் இலங்கையின் எந்தப் பகுதிக்கும் செல்ல சுதந்திரமிருக்க வேண்டும் என்பது தான் யு.என்.பி.யின்கொள்கை.

# ராணுவ வீரர் சுட்டு கொன்றதாய் வழக்கு

## மூன்றும் முறையும் ஒத்தி வைக்கப்பட்டது

மாவிட்டபுரம், செவ்வாய்

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த தம்பையா சபாரத்தினம் என்பவரை இவ் வருடம் நவம்பர் மாதம் 10-ம் திகதி வல்வெட்டித்துறை இராணுவ முகாமைச் சேர்ந்த துப்பாக்கி வீரர் பெரேரா, கார்ப்பரல்குணரத்தினவின் உத்தரவுப்படி சுட்டுக்கொலைசெய்ததாகக் குற்றஞ்சாட்டி காங்கேசன் துறை உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன் திரு.ஏ. எஸ். மரியநாயகத்தினால் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதிபதி திரு. ஏ. வைத்திலிங்கம் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் நீதிபதி, அரசாங்கப் பரிசோதகரின் அறிக்கை வராமையால் மூன்றாவது தடவையாக ஜனவரி மாதம் 16-ம் திகதிக்கு வழக்கை ஒத்தி வைத்தார்.

## இ. போ. சபை புதிய ஜெனரல் மனேஜர்

கொழும்பு, செவ்.

கிராம அபிவிருத்தி குடிசைக் கைத்தொழில்களின் டைரக்டர் திரு. எம். எஸ். பெரேரா இலங்கைப் போக்குவரத்து சபையின் ஜெனரல் மனேஜராக நியமிக்கப்படவிருக்கிறார்.

இ. போ. ச.வின் ஜெனரல் மனேஜராக நியமிக்கப்பட முன்னர் திரு. பெரேரா ஒரு வருடகாலம் சம்பளமில்லாத லீவு பெற்றுக்கொள்ளவிருக்கிறார். திறைசேரிக் காரியதரிசி திரு. ஷேர்லி அமரசிங்கா திரு. பெரேராவுக்கு ஒருவருட லீவு கோருவதற்கான கடிதமொன்றை அரசாங்கசேவைக் கமிஷனுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

## சர்வதேச குழந்தைகள் விழாவில் இலங்கை பங்கு பற்றும்

கொழும்பு, செவ்வாய்

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கும் நான்காவது சர்வதேச குழந்தைகள் நத்தார் விழாவில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், ஈரான், நேபாளம் உட்பட 52 ஸ்தானிகராலயங்களைச் சேர்ந்தவர்கள் கலந்து கொள்வார்கள்.

இவ்விழாவின்போது ஒவ்வொரு நாடுகளைச் சேர்ந்த பிள்ளைகளும் தமது மொழியில் தங்களுடைய நத்தார் செய்தியை ஒலிபரப்புவார்கள். விழாவில் இசை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். 2000 பேர் விழாவில் கலந்துகொள்வார்கள்.

## மந்திரியை விலக்க சங்கம் கோரிக்கை

கொழும்பு. செவ்வாய்

ஸ்தலஸ்தாபன வீடமைப்பு மந்திரியை மந்திரிப் பதவியிலிருந்து விலக்கவேண்டுமென இலங்கை வாடகைக் குடியிருப்பாளர் சங்கத்தின் நிர்வாக சபை ஒரு தீர்மானத்தின்மூலம் கோரியுள்ளது. இதற்காகக் கூட்டங்கள் நடத்துவதற்கு சங்கம் இலங்கை முற்றிலுமுள்ள கிளைச்சங்கங்களுக்கு அதிகாரம் வழங்கத் தீர்மானித்துள்ளது. மேற்படி அமைச்சின் அதிகாரிகள் வாடகை சம்பந்தமான சட்டங்களை அமுல் நடத்துவதற்கு மந்திரி நடவடிக்கை எடுக்காததனாலேயே சங்கம் இவ்விதம் தீர்மானித்துள்ளது.

## ஜயாறன் எழுதுவது

இந்தியாவைத் தாக்குவதற்காக, இனி போர்ச்சுக்கீசியர்கள், யுத்தக் கப்பல் விமானம் முதலியவற்றை அனுப்புவதாயின், அவற்றை இலங்கை இங்கு அனுமதிக்காதென்று, இலங்கைப் பிரதமர் உத்தரவு போட்டுவிட்டார். சபாஷ்!

முன்னர் இந்தோனேஷியர்களைத் தாக்க, டச்சு யுத்தக் கப்பல்களும் விமானங்களும் வந்த போது, அவற்றுக்கு இடமளிக்க முடியாதென்று பெரிய சேனநாயகா தடை உத்தரவு போட்டார். டச்சு அரசாங்கம் திகைத்தது. இந்தோனேஷியாவும் விடுதலை பெற்றது. ஆசிய ஆபிரிக்க நாடுகளெல்லாம் கட்டுப்பாடாக இப்படி ஒன்று சேர்ந்து விட்டால், காலனி ஆட்சி உலகில் பறக்கவேண்டியது தான்!

* * *

இதற்குப் பயந்துதான் இப்போது சில காலனி பெருச்சாளிகள் தர்ம உபதேசம் செய்கின்றன. 450 வருடகாலமாக கோவா, போர்ச்சுகலுக்குச் சொந்தமாக இருந்ததாம். ஆகவே அதை அங்கிருந்து விரட்டக் கூடாதாம். தண்டப் பிரயோகம் செய்ததற்காக இந்தியாவைக் கண்டிக்கின்றன.

கோவாவையும் மற்றகாலனிகளையும், இந்த தர்மாத்மாக்கள் முன்னர் பிடித்தார்களே, தண்டப் பிரயோகம் செய்யாமல் அன்பு, அகிம்சாமார்க்கத்தில்தான் பிடித்தார்களோ? கோவா யாருக்குச் சொந்தம்? அங்குள்ள பொதுமக்களுக்கா? அல்லது ஆறுயிரம் மைலுக்கு அப்பாலுள்ள வெள்ளைப்பெருச்சாளிகளுக்கா? இத்தனை காலமாகச் சுரண்டியது போதாதா?

* * *

"சரஸ சாம தான பேத தண்ட சதுர ஸாடி தெய்வமே நேபிரோவவே" என்று ஸ்ரீராமனைக் குறித்து தியாகராஜர் பாடினர். சாம, தான, பேத தண்டம் என்று நான்கு உபாயங்களுண்டு இதமான பேச்சுக்களைக் கூறியும் சீதையை திருப்பிக்கொடுக்க இராவணன் மறுத்தான். அயோத்தியை சாசுவதமாகக் கொடுப்பதாகக் கூறியும் கேட்கவில்லை. பின்னர் சகோதரரான விபீஷணனை ராஜாவாக்கி, இராவணனை சம்ஹரித்து ஆட்கொண்டதாகவும் அப்பேர்ப்பட்ட தெய்வம் என்னையும் ஆட்கொள்ள வேண்டுமென்றும் ஸ்ரீ தியாகராஜர் வேண்டுகின்றார்.

இதமான எவ்வளவோ கூறியும் கோவா மக்களை விடுதலை செய்ய போர்ச்சுகல் மறுத்தது. 14 வருடம் பொறுத்திருந்து முடிவில் தான் தண்டற பிரயோகத்தில் இந்தியா இப்படி நேரிட்டது. அடி உதவுவதுபோல் சிலருக்கு அண்ணன் தம்பியும் உதவார் என்று வசனமுண்டு. அவர்களுக்கு அந்தப் பாஷைதான் புரியும்.

நல்லவேளையாக இந்த நடவடிக்கையில் அதிக உயிர்ச் சேதமெதுவு மேற்பட்டதாகத் தெரியவில்லை, போர்ச்சுக்கீய கவர்னர் ஜெனரல் உள்ளிட்டு யாரும் எதிர்க்கவில்லை. வெற்றிகரமாகப் பின்வாங்கி பறந்தோடிவிட்டனர். அந்த மட்டில் நல்லதுதான்.

500 வருடமாக அடிமைப்பட்டிருந்த 7 லட்சம் பேர்களும் தங்களை விடுவித்த ராமரான நேருவைப் போற்றி, இந்திய வீரர்களைக் குதூகலமாக வரவேற்கிறார்கள். கோவாவின் உண்மை சொந்தக்காரர்களே இந்த நடவடிக்கையை வரவேற்கையில் இதைக் கண்டிப்பதற்கு மற்றவர்களுக்கு வாயேது?

* * *

"இந்தியா இந்த நடவடிக்கையை எடுத்ததால் பக்கத்திலுள்ள இலங்கை போன்ற

(5 ம் பக்கம் பார்க்க)

# கொலை செய்ததாக 6 பேர்மீது வழக்கு

## ஜனவரி 2-ந் தேதிக்கு ஒத்திவைப்பு

மாவிட்டபுரம், செவ்வாய்

மல்லாகத்தைச்சேர்ந்த தம்பிப்பிள்ளை கந்தையா என்பவரை இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் 12-ம் திகதி மல்லாகச் சந்தியில் வைத்துக் கொலைசெய்ததாக ஏழாலையைச் சேர்ந்த இராமலிங்கம் கனகரத்தினம், துரையப்பா ஞானசேகரம், செல்லையா இரத்தினம், இராமலிங்கம் சிவஞானம், செல்லையா இராசதுரை, சின்னப்பு துரையப்பா ஆகிய ஆறுபேர்கள் மேலும் குற்றம் சாட்டி சுன்னாகம் பொலிசாரால் மல்லாகம் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு இன்று எடுத்துக் கொள்ளப்பட்டபோது எதிரிகளில் ஒருவரான சின்னப்பு துரையப்பா சுகவீனமுற்று இருப்பதாக சிறைச்சாலை அதிகாரியிடம் இருந்து வந்த கடிதத்தையொட்டி நீதிபதி வழக்கை ஜனவரி மாதம் 2-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

---

## பெற்றோர் ஆசிரியர் சங்கம்

### தலைமைஆசிரியர் நியமனம் பற்றி தீர்மானம்

ஊர்காவற்றுறை, திங்கள்

சரவணை நாகேஸ்வரர் வித்தியாலயப் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் பொதுக்கூட்டம் ஒன்று வித்தியாலய மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

பாடசாலையின் வளர்ச்சி பற்றியும் புதிய தலைமை ஆசிரியர் நியமனம் பற்றியும் ஆலோசித்து ஏற்ற நடவடிக்கை எடுப்பதற்காகக் கூட்டப்பட்ட இக்கூட்டத்திற்கு கி. ச. அங்கத்தவர் திரு. கு. வைரமுத்து தலைமை வகித்தார்.

தலைமை ஆசிரியர் நியமனம் பற்றி ஆலோசிக்கப்பட்டபோது திறமையும் கடமையுணர்ச்சியும் உடைய உள்ளூர் ஆசிரியர் ஒருவரைத் தலைமை ஆசிரியராக நியமிக்கவேண்டுமென்ற சபையோரின் விருப்பத்திற்கு ஏற்ப வித்துவான் எஸ். ஆர். பொன்னையாவைத் தலைமை ஆயிரியராக நியமிக்க வேண்டுமென வித்தியாபகுதியினரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் இக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

## சிறைச்சாலையில் ஈச்மன்

ஜெருசலம், டிச. 18

லட்சக்கணக்கான யூதர்களைக் கொன்றவர் என்ற குற்றச்சாட்டின்மீது ஜெருசலம் நீதிமன்றத்தினல் சென்ற வெள்ளிக்கிழமை மரண தண்டனை விதிக்கப்பட்ட அடல்ப் ஈச்மன் இப்பொழுது இஸ்ரேலில் ஒரு சிறை மரண தண்டனை நிறைவேற்றத்தை எதிர்பார்த்திருக்கும் கைதிக் கூண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

கைவிலங்கு பூட்டப்பட்டு, சிறைச்சாலையில் கைதிகளுக்கு வழங்கப்படும் உடையணிந்து அவர் கொண்டு செல்லப்பட்டார்.

ஈச்மனுக்கு விதிக்கப்பட்ட தீர்ப்பை ஆட்சேபித்து விரைவில் அப்பீல் செய்யப்படுமென அவரது வழக்கறிஞர் தெரிவித்துள்ளார்.

## 27-ந்திகதி இளவரசர்கள் சந்திப்பு

ஜெனிவா, டிச. 19

லாவோசில் சர்வதேச மேற்பார்வையுடனும் கட்டுப்பாடுடனும் அமைக்கப்படவிருக்கும் நடுநிலைமை அரசாங்கத்தின் அமைப்பு வாசகத்தை ஜெனிவாவில் நடைபெறும். லாவோசுக்கான சர்வதேசக் கமிஷன் ஆமோதித்துள்ளது.

நடுநிலைமை அரசாங்கம் அமைப்பது சம்பந்தமாக நடுநிலைமைத் தலைவர் இளவரசர் சுவன்னபூமா வலதுசாரித் தலைவர் இளவரசர் பூன்னும் இடதுசாரித் தலைவர் இளவரசர் சுவன்னவாங் ஆகிய மூவரும் இம்மாதம் 27-ந்திகதி தொடக்கம் மூன்று தினங்களுக்குக் கூடிப் பேசுவர்.

---

## எண்ணை கார்ப்பரேஷன்

### மார்ச் மாதத்தில் வேலை ஆரம்பமாகும்

கொழும்பு, செவ்வாய்

எண்ணை கார்ப்பரேஷனின் அதிகாரிகள் உணவு வர்த்தக கப்பல்போக்குவரத்து அமைச்சின் உத்தியோகஸ்தர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்கள். கார்ப்பரேஷன் பெட்ரோல் வாங்கி விநியோகம் செய்வதை உறுதிப்படுத்தவே இப்பேச்சுவார்த்தை நடைபெற்றது.

ரஷ்யா உட்பட வேறுசில நாடுகளும் இலங்கைக்கு பெட்ரோல் விநியோகம் செய்ய சம்மதம் தெரிவித்துள்ளன. தற்பொழுது இலங்கை ரஷ்யாவுடன் வர்த்தக ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகள் நடத்திவருகிறது.

கார்ப்பரேஷன் அடுத்தவருடம் மார்ச் மாதத்தில் எண்ணை விநியோகிக்கும் வேலையை ஆரம்பிக்குமெனத் தெரிகிறது.

---

## மேற்கு ஈரியான்

### இந்தோனேஷியா விடுதலை செய்யும்

ஜகார்த்தா, டிச. 18

"டச்சுக்காரர்களிடமிருந்து மேற்கு புதிய கினியை விடுதலை செய்வதற்கு இந்தோனேஷிய ராணுவம் தயாராக இருக்க வேண்டும்" என்று இந்தோனேஷிய பாதுகாப்பு மந்திரியும் இராணுவத் தலைவருமான ஜெனரல் அப்துல் ஹரிஸ்நஸூயன் நேற்றுத் தெரிவித்தார்.

"ஜனதிபதி சுகர்னே கட்டளை பிறப்பிக்கவிருக்கிருர். கட்டளை பிறப்பித்ததும் எங்களுக்குக் கடும் வேலை இருக்கும்" என்று அவர் கூறினர்.

"எங்களிடம் ஒப்படைக்கவிருக்கும் பொறுப்பை நாங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றுவோம் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு" என்று பாதுகாப்பு மந்திரி தெரிவித்தார்.

---

## இராணுவம் புகுந்தது

### உணவுப் பொருள்களை இறக்குவதற்கு!

கொழும்பு, செவ்வாய்

அத்தியாவசிய உணவுப் பொருள்களையும் அழுகிப்போகக்கூடிய உணவுப் பொருள்களையும் இறக்குமதி செய்வதற்குத் தயாராக ராணுவத்தினர் நேற்று மாலை கொழும்புத் துறைமுகத்திற்குள் பிரவேசித்தனர்.

## ஜயாறன்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

சிறிய நாடுகளுக்குக் கலவரமேற்பட்டுள்ளது. இங்குள்ள இந்திய சிறுபான்மையோர் பிரச்சினை போன்றவைகள் தீர்க்கப்படாவிடில், தங்கள் பொறுமையை இந்தியத் தலைவர்கள் இழந்து இலங்கைமீதும் இந்தியா அவ்வித இராணுவ நடவடிக்கை எடுக்குமோ என்ற ஒரு பீதியை உண்டாக்கி உள்ளது" என்று கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையொன்று எழுதுகின்றது.

வெறும் வாயை மெல்லுகிறவர்களுக்கு உமி அகப்பட்டு விட்டால் விடுவார்களா?

எப்படியும் இந்த மனித பிரச்னையை சமுகமாக சீக்கிரம் தீர்த்துவிட்டால், இந்த மாதிரி வீண் பீதிகளுக்கு இடமிராதல்லவா?

* * *

இதை எழுதிக்கொண்டிருக்கையில் மின்சார விசிறி திடீரென்று நின்றது. என்ன என்று விசாரித்ததில், மின்சார வேலைநிறுத்தமாம்! அட கடவுளே!

---

## பாம்பு புகுந்த கதை!

### மகஜரில் எம். பி.யின் கவனம்!

முள்ளியவளை, திங்கள்

"தாழ்த்தப்பட்ட மக்களால் 3 வருடங்களுக்குமுன் தோற்றுவிக்கப்பட்ட பள்ளவெளிச் சனசமூகநிலையத்துக்கு, வவுனியா அரசாங்க அதிபரால் கொடுக்கப்பட்ட நிலத்தையும் அதிலுள்ள கட்டடத்தையும் வற்றாப்பழைக் கிராமத்தைச் சேர்ந்த உயர் வகுப்பினர் சிலர், சட்டவிரோதமாக ஆக்கிரமித்துள்ளதாக, பள்ளவெளி ச. ச. நிலையத்தினர் எனக்கு முறையிட்டுள்ளார்கள். இது, எறும்பு புற்றெடுக்கப் பாம்பு குடிகொண்ட கதை போல இருக்கிறது."

வற்றாப்பழைக் கிராமத்தையடுத்த பள்ளவெளிச் சனசமூக நிலையம் சம்பந்தமாக வவனியாப் பிரதிநிதி திரு. தா. சிவசிதம்பரம், வட பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் மேற்கண்டவாறு குறிப்பிட்டு, உடனடியாக விசாரணை நடத்தக் கோரியுள்ளார்.

---

## சதித்திட்டம் காரணமல்ல!

கொழும்பு, செவ்.

"மாகோவுக்குச் சமீபத்தில் மெயில் தடம் புரண்டதற்கு சதிச் செயல் காரணமல்ல" என்று ரெயில்வே ஜெனரல் மனேஜர் திரு. பி. ராம்பாலா நேற்றுத்தெரிவித்தார். மாகோவில் ரயில் தடம்புரண்டது விபத்தினல்தான் என்பதற்குப் போதிய ஆதாரம் உள்ளது எனவும் திரு. ராம்பாலா கூறியுள்ளார். "ரெயிலின் முன் பெட்டிகளும் கடைசிப் பெட்டிகளும் தடம்விட்டுவிலகாது ஒருபகுதியிலுள்ள பெட்டிகளே தடம்விட்டுவிலகியதே இதற்குப் போதிய சான்றும். சதி காரணமாக இருந்தால் இவ்வாறு நிகழ்ந்திருக்காது"என்று அவர் கூறினர்.

விபத்து சம்பந்தமான விசாரணைகள்யாவும் முடிந்துவிட்டன. சம்பவத்துக்கு சதி காரணம் என்பதற்கு எதுவித அத்தாட்சியும் இல்லை. சேதமுற்ற ரெயில்பாதை இப்போது உபயோகத்துக்குத் தகுதியுடையதாக இருக்கிறது என்று திரு. ராம்பாலா தெரிவித்தார்.


அறிவிக்கின்றேம்!

யாழ்ப்பாண இளைஞர்களுக்கு ஓர் அரியசந்தர்ப்பம்

நாங்கள் கீழ்க்காணும் ஹைத்திராமணி தயாரிப்பான சேட்டுகளுக்கு யாழ்ப்பாணத்தில் ஏகவிநியோகஸ்தர்கள் என்பதை அறிவிக்கின்றேம்.

★ பொப்பிலர் (Popular) வெள்ளையும் மற்றும் கலர்களிலும்
★ பொப்பிலர் டிலுக்ஸ் (Popular De Luxe) ஸுப்பபைன் வெள்ளை
★ கொன்சல் (Consul) "ரேஸ் புல்" கோடுகள் போட்டவை
★ டொட்ரேன் (Tetron) திறமான கலர்களில்
★ நொன் அயன் (Non Iron) கவர்ச்சிகரமானது கலர்களிலும்

இதுபோன்ற பலவகை ரகத்திலுண்டு.

குழந்தைகளுக்கு பிள்ளைகளுக்கு ஏற்ற அளவில் உண்டு.

மொத்த விற்பனை விசாரணைக்கு

பயரும்ஸ்

யாழ்ப்பாணம்.

## அப்பீலில் அபராதம் உயர்த்தப்பட்டது

### கற்கள் கொண்டுவந்த வியாபாரிவழக்கு

சென்னை, டிச. 18

செல்லத்தக்க லைசென்ஸ் ஏதுமின்றி இந்தியாவுக்குள் ரூ. 1 லட்சம் மதிப்புள்ள ஆபரணக் கற்களைக் கொண்டுவந்ததற்காக ரூ. 700 அபராதமும் ஆறுமாதக்கடுங்காவலும் விதிக்கப்பட்ட அமெரிக்க வியாபாரி எஸ். மீர்ஸா யெப்பின் தண்டனையை சென்னை ஹைகோர்ட் ரூர்ஜிதம் செய்தது. அப்பீல்தாரரை சிறைக்கு அனுப்ப வேண்டியது அவசியமில்லை எனத் தாம் கருதுவதால் அபராதத்தை ரூ. 2000 ஆக நீதிபதி உயர்த்தியிருப்பதாகத் தீர்ப்பளித்தார்.

அமெரிக்க வியாபாரி மீர்ஸா யெப் செப்டம்பர் 2-ந் தேதியன்று விமானமூலம் கொழும்பிலிருந்து வந்தவர். பிரதமமாகாண மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் அவர்மீது வழக்குத் தொடரப்பட்டபோது முதலில் கூறிய தண்டனை விதிக்கப்பட்டது.

## தோட்ட சுப்ரின்டன் கொலை

### 18 பேர் கைது

ஹட்டன், செவ்வாய்

எல்பின்டேல் தோட்ட சுப்ரின்டன் திரு. பசில் பெர்ஞண்டோ தடியால் கடுமையாகத் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து நோட்டன்பிறிஜ் பொலிஸார் சந்தேகத்தின் பேரில் 18 பேரைக் கைதுசெய்துள்ளனர்.

ஹட்டன் மாஜிஸ்திரேட் திரு. எஸ். செல்லத்துரை விசாரணை நடத்தினர்.

மலிவு விற்பனை!

ஹான்ட்லூம்ஸ் திருப்பூர் நூல் சேலைகள்

பிளேன் கலர்களில்

ரோயல் நீலம், பேப்பிள் பச்சை, மற்றும் சொட் கலர்களான ஓறஞ்சு, நீலம், போன்ற கலர்களில் ரிபன் போடர்கள் போட்டவை

சாதாரண விலை 12-50
விற்பனை விலை 9-50

மேற்படி சேலைகள் வரிக்குதிரை கோடுகள் போட்டவை

சிவப்பு / கறுப்பு, நீலம் / கறுப்பு, ஓறஞ்சு / கறுப்பு, மெஜன்டா / பேப்பிள், வெள்ளை / பச்சை / வெள்ளை

சர்தாரண விலை 13-50
விற்பனை விலை 10-50

டயரும்ஸ்

யாழ்ப்பாணம்

16

விற்பனையாகின்றன !

1962-ம் ஆண்டு தினக்குறிப்பு

மாணவர்களுக்கென தனி டயறி.
அவர்களுக்குப் பயன்படும்
பல அம்சங்களுடன்.
விலை சதம் 75

பொதுமக்கள் பாவிக்கக்கூடியது
இதில் பல விசேஷ அம்சங்கள்
விலை சதம் 75
தபால் செலவு பிரத்தியேகம்

ஈழநாடு லிமிட்டெட்
63, சிவன் கோவில் மேலே வீதி, யாழ்ப்பாணம்.

விற்பனையாளர்

தமிழ்ப் பண்ணை
193, கே. கே.எஸ். வீதி, — யாழ்ப்பாணம்.

# பண்டிதர் ஆழ்வாப்பிள்ளைக்கு

## 'முத்தமிழ் புலவர்' பட்டமளித்து கௌரவம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

கட்டைவேலியூர் பண்டிதர் ஜே. எஸ். ஆழ்வாப்பிள்ளைக்கு உதயதாரகை இலக்கிய மன்றம் முத்தமிழ்ப்புலவர் என்ற பட்டத்தை அளித்து பொன்னுடை போர்த்திப் பாராட்டிக் கௌரவித்தது.

இப்பாராட்டு விழா நேற்று மாலை யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் வண. டி. ஆர். அம்பலவாணர் தலைமையில் உதயதாரகை இலக்கியமன்றத்தினுல் நடாத்தப்பட்டது. திரு. கே. பி. ஹரன் பண்டிதர் ஆழ்வாப்பிள்ளைக்கு பொன்னுடை போர்த்தினர் தலைமை வகித்த மன்றத் தலைவர் வண. அம்பலவாணர் பட்டமளித்து உதய தாரகை மன்றத்தின் சார்பில் ஓர் பத்திரத்தை வாசித்து அளித்தார்.

தலைமையுரையில் வண. அம்பலவாணர் பேசியதாவது:-

யாழ்ப்பாணத்துக் கிறிஸ்தவ மக்களை தமிழ் இலக்கியத்தில் ஆர்வத்தை ஏற்படுத்துவதே இம் மன்றம் ஆரம்பிக்கப்பட்டது. ஒரு கிறிஸ்த கவிஞருக்கு இங்கு நடைபெறும் முதலாது விழாவில் பல்வேறு சமயத்தவரும் ஒன்று சேர்ந்து பாராட்டுத் தெரிவிக்கிருர்கள். இந்த நல்ல பண்பு தமிழரிடையே வளரவேண்டும். கவிஞர்களையும் பெரியோர்களையும் பாராட்டுவதனுல் சமுதாயத்துக்கும், நாட்டுக்கும்அதிக பலன் ஏற்படும்.

மன்றக் காரியதரிசி திரு. கே. பி. முத்தையா தமது வரவேற்புரையில் அன்பை அடிப்படையாகக் கொண்ட சைவரும், தியாகத்தை அடிப்படையாகக் கொண்ட கிறிஸ்தவரும், சகோதரத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட இஸ்லாமியரும் ஒன்றி வாழ வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்திப் பேசினர்.

திரு. ஹரன் பேசும்போது கூறியதாவது:-

நாமெல்லோரும் தெய்வத்தின் குழந்தைகள். தெய்வ நம்பிக்கையிருப்பவர் களிடம் வேற்றுமை இருக்க முடியாது. வேற்றுமைகளை களைந்தெறிந்து நாமெல்லோரும் ஒன்றுபட வேண்டியகாலம் நம்மை அணுகிக்கொண்டிருக்கிறது. சமயத்தின் மூலம் சமரசத்தை ஏற்படுத்தக்கூடிய பலர் தோன்ற வேண்டும்.

வித்துவான் க. வேந்தனர் பேசும்போது, கவிதைகள் இறவாமல் வாழும் கவிதைகளாக இருக்க வேண்டுமானல் மக்களோடு கவிதை கைகோர்த்துமனதோடுஒன்றியிருக்கக் கூடிய உயர்ந்த சாயலைப் பெற வேண்டுமென்றும் கிறிஸ்தவப் பெரியார்கள் தமிழுக்குச் சிறந்த தொண்டாற்றியிருக்கிருர்களென்றும், இந்த உலகத்தில் தெய்வக் கொள்கை ஒன்று இருப்பது அவசியமென்றும் ஈழத்தில் கவிதையில் மறுமலர்ச்சி ஏற்பட்டிருப்பதாகவும் பண்டிதர் ஆழ்வாப்பிள்ளையின் கவிதைகளும் சிறந்த இடத்தைப் பெற்றிருப்பதாகவும் கூறினர்.

வித்துவான் வேலன் பேசும்போது கூறியதாவது:-

நாம் வாழவேண்டுமானல் பிறரைப் பாராட்ட வேண்டும். ஆனல் இன்று சமுதாயத்தில் போலித்தன்மை மலிந்து நெஞ்சில் வஞ்சகம் அதிகமாக உறைந்து கிடப்பது வேதனையாக இருக்கிறது. தமிழரின் நெஞ்சம் திருந்த வேண்டும். கட்சி மனப்பான்மைகளை மறந்து பிறர் நிறைவை மாத்திரம் போற்றி நாம் நிறைவு பெறவேண்டும்.

மட்டக்களப்பு கவிஞர் இராசபாரதி பாராட்டுக் கவிதைகள் மூலம் பாராட்டுத் தெரிவித்தார்

பண்டிதர் ஆழ்வாப்பிள்ளை தமக்கு அளிக்கப்பட்ட பாராட்டுக்கு உதயதாரகை இலக்கிய மன்றத்துக்கு நன்றி தெரிவித்தார்.

விழா ஆரம்பமாவதற்கு முன் திரு. ஆழ்வாப்பிள்ளை மத்திய கல்லூரியிலிருந்து மேளவாத்தியசகிதம் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார்.

## இலங்கைஅகதிகளுக்கு புனர் வாழ்வு

### உதவிகள் தருவது பற்றி விளக்கம்

சென்னை, டிச. 15

இலங்கையிலிருந்து தமிழ் நாட்டுக்கு திருப்பி அனுப்பபட்டவர்களுக்கு புனர் வாழ்வு அளிக்கும் திட்டங்களின் கீழ் அப்படி வந்தவர்களுக்கு வேலை தேடித்தரும் ஸ்தாபனங்களில் விசேஷ சலுகைகள் அளிக்கப்படவேண்டுமென்று உத்தரவிடப்பட்டுள்ளது. இவர்களுக்கு நிலமும் பயிரிடுவதற்கான உதவிகளும் வசதிகளும் அளிக்கப்படுகின்றன என்று உள்துறை அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் இன்று சட்டசபையில் திரு. எம் எஸ். செல்வராஜனின் கேள்விக்கு பதில் கூறினர்.

## ரூ. 5000 பிணையில் மோட்டார்காரைஎடுத்து செல்ல அனுமதி

### ஊரெழு கொலைவழக்கு விசாரணை மீண்டும் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செவ்வாய்

ஊரெழு கொலை வழக்கு நேற்று மீண்டும் யாழ்ப்பாணம் மாஜிஸ்ரேட் திரு. அரசுவால்டன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இக்கொலை சம்பந்தமாகப் பொலிசாரால் கைப்பற்றப்பட்டு கோர்ட்டில் வைக்கப்பட்டிருந்த மோட்டார் காரை பிணையில் எடுத்துச் செல்ல அனுமதிக்குமாறு கோரி திரு. ஆர். விசுவநாதன் ஓர் மனுவைத் தாக்கல் செய்தார்.

இந்த மோட்டார் காரின் சொந்தக்காரரான எஸ். கந்தையா என்பவரை ரூ. 5000 பிணைப்பணம் செலுத்தி அந்த மோட்டார் காரை எடுத்துச் செல்ல மாஜிஸ்ரேட் அனுமதியளித்தார்.

இவ்வழக்கு விசாரணை மீண்டும் இம்மாதம் 27-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# மற்றுமொரு சாராயவடி நிலையம்?

## அரசாங்கம் ஆலோசனை செய்கிறது

கொழும்பு, செவ்வாய்

சாராயம் தயாரிப்பதற்கென மற்றுமொரு சாராய வடி நிலையத்தை நிறுவ அரசாங்கம் ஆலோசனை செய்துவருகிறது.

சாராய விலையில் இரண்டு ரூபாய் குறைத்ததன்பின்னர் சாராயத்துக்கு சமீப காலங்களில் நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளதாகக் கைத்தொழில் உள்நாட்டுக் கலாசார அமைச்சைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

தென்னை உற்பத்தியாகும் பகுதியில் மற்றுமொரு சாராய வடி நிலையத்தை நிறுவினல் சாராயத் தேவையை ஓரளவு பூர்த்திசெய்யலாமென கலால் இலாகா கமிஷனர் திரு. டி. பி. வடுகோடபிட்டியா அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அணுவும் அசைக்காது!

ஒட்டாவா, டிச. 18

அணு ஆயுதங்கள் வெடிப்பதாலுண்டாகும் கொடுமையான உஷ்ணத்திலிருந்து பாதுகாக்கக்கூடிய நைலான் வலையொன்றை கனடா தற்காப்பு ஆராய்ச்சி கவுன்சில் கண்டுபிடித்துள்ளது. அணு ஆயுதத்திலிருந்து உண்டாகும் உஷ்ண கதிரியக்கத்துக்குச் சமமான மாற்று உஷ்ணக் கதிரியக்கத்தை உற்பத்தி செய்யும் சூரிய வெப்ப ஊது உலையிலிருந்து தயாரான பொருள்களைக் கொண்டு புது நைலான் தயாரிக்கப்படுகிறது. கண்ணிமைப்பதற்குள் வெறும் புகைப்படலமாக மாறி துணிகளையும், சருமத்தையும் பாதுகாக்கிறது.

மலிவு விற்பனை!

பங்களூர் சேலைகள்
பூ டிசைன்கள் போட்டவையும் கோல்ட் போடர்கள் போட்டவைகளும்
றவுக்கைத் துண்டுடன்
12 "சொட்" கலர்களில் உள்ளன

சாதாரண விலை 68-00
விற்பனை விலை 52-50

மேற் கூறிய சேலைகள்
சில்க் நூல் வேலைப்பாடுடன்
பிங்க், நீலம், பச்சை, ஓறஞ்சு, மயில், சாம்பல், சமன் பிங், வெள்ளை, "சொட்" கலர்களிலுள்ளன

சாதாரண விலை 47-50
விற்பனை விலை 32-50

டயரும்ஸ்

யாழ்ப்பாணம்.

17

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

புதன் 20-12-61

காலை 6-30 திருவெம்பாவை அஞ்சல், 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 காலைக்கதிர், 7-30 திரை இசை, 8-00 புல்லாங்குழல், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள் 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வீணை.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-30 வேலுப்பிள்ளை சிவஞானம் - வயலின், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 தேர்ந்த இசை, 9-30 ஏ. டபிள்யூ. மயில்வாகனம் - பேச்சு, 9-45 எஸ். சோமசுந்தரம் - பாட்டு.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 சாவிய மங்கலம் சுந்தரம் ஐயர்-வீணை.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-30 வாத்திய இசை, 1-50 மெல்லிசை, 2-15 எஸ். கே. சுமதி - பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 சென்னை அஞ்சல், 7-45 'தானே வரும்' - கவிதை நாடகம், 8-00 சாவிய மங்கலம் சுந்தரம் ஐயர்-வீணை, 8-30 திரைப்பட இசை, 9-15 நல்லுரை, 9-30 டெல்லி அஞ்சல்.

## "முரண்பாடான கல்வித்திட்டம்"

பதுளை, திங்கள்

"கல்வித்திட்டம் கண்டனத்துக்குள்ளாகியுள்ளது அதைத் தயாரிக்கு முன்பு நாட்டின் நாலாபக்கத்திலும் உள்ளவர்களைக் கலந்திருக்கலாம்" என்று வெளிமடை அம்புகஸ்தோவைத் தோட்ட இ. தொ. கா. கூட்டத்தில் பேசும்போது திரு. என். வடிவேலு கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் "ஒரு ஏழையின் பிள்ளைக்கும் ரோயல் கல்லூரியில் சேர வாய்ப்பு உண்டாக்குவதே புதிய கல்வித் திட்டத்தின் நோக்கம் என்று கல்விமந்திரி சொல்கிறார். ஆனல் தொழிலாளர்கட்கு அது வேண்டியதில்லை. பக்கத்திலுள்ள நகரத்துப் பள்ளிகளில் அனுமதி வழங்கினல் போதும்" என்றார்.

## 'காலி மாநகரசபையை உடன் கலைக்கவும்'

### சுதந்திரக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம்

காலி, திங்கள்

காலி மாநகரசபையை உடனடியாகக் கலைத்து, அதன் நிர்வாகத்தை ஒரு விசேஷ கமிஷனரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று ஸ்தலஸ்தாபனமந்திரியைக் கேட்பதென்ற தீர்மானம் நேற்று காலியில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் (காலிக் கிளை) பொதுக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் காலிப் பகுதி தலைவரும் காலி மாநகரசபை அங்கத்தவருமான திரு டி. விஜயகுலசூரியா இத்தீர்மானத்தை பிரேரித்தார்.

## துறைமுகத்தில் 48 கப்பல்கள்

### வேலைநிறுத்தம் நீடிக்கிறது

கொழும்பு, திங்கள்

கொழும்புத் துறைமுகத் தொழிலாளரின் வேலைநிறுத்தம் இன்றுடன் நான்காவது நாளாக தொடர்ந்து நடைபெறுகிறது. துறைமுகத்தின் உள்ளும்வெளியேயும் உள்ள 48 கப்பல்களில் 10 உணவுக் கப்பல்கள் இறக்குமதிக்காக காத்துக்கொண்டு நிற்கின்றன

கடந்த சனிக்கிழமை இரவு துறைமுகத்தில் இருந்து வெளியேறிய 11 கப்பல்கள் காலிக்குச் சென்றன. மற்றவைகள் சரக்குகளை இறக்குமதி செய்யாமலே திரும்பிவிட்டன.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் துறைமுகத் தொழிலாளரின் வேலைநிறுத்தம் சம்பந்தமாக இன்று காலை, தொழில்,தேசிய சேவை மந்திரியை துறைமுகத் தொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்கள்.

## பௌத்த காங்கிரஸ் மகாநாடு

கொழும்பு, திங்கள்

இன்று வாழும் மக்களுக்கு மட்டுமல்ல எதிர்கால சந்ததியினருக்கும் தீங்கிழைக்கக் கூடிய அணு ஆயுத சோதனைகளையும், குண்டுகள் வெடிப்பதையும் நிறுத்த வேண்டும் என்று அகில இலங்கை பௌத்த காங்கிரஸ கேட்டுக் கொள்ளும் தீர்மானமொன்று இம் மாதம் 29ந் திகதி தொடக்கம் 31ந் திகதிவரை இரத்தினபுரியில் நடைபெறவிருக்கும் பௌத்த காங்கிரஸின் வருடாந்த மகாநாட்டில் விவாதிக்கப்படவிருக்கிறது.

## ஆசிரியர்கள் இடமாற்றம்

ஓமந்தை, திங்கள்

வவுனியா சைவப்பிரகாச வித்தியாசாலையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக உதவி ஆசிரியர்களாகக் கடமையாற்றிய திரு. கார்த்திகேசு, திரு. கனகரத்தினம் என்போர் யாழ்ப்பாணப்பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் பிரியாவிடை அளித்துக் கொண்டாடப்பட்டது.

## மருந்து எடுக்கச் சென்றவர் வழியில் மரணம்

பதுளை, திங்கள்

பதுளை, 'ஜட்ஜஸ் ஹில்' என்னும் இடத்தில் கடந்த 16-ம் திகதி ஒரு பிரேதம் கிடப்பது பற்றி பதுளைப் பொலிசுக்கு அறிவிக்கப்பட்டது. ஆஸ்பத்திரி பொலிஸ் உத்தியோகத்தர் திரு. சுரதிஸ்ஸ ஸ்தலத்திற்குச் சென்று பார்வையிட்டதில் இறந்தவர் பெயர் கங்கத்திரால் என்றும் அவர் பஸ்ஸரையைச் சேர்ந்தவர் என்றும் அவர் வைத்திருந்த நாட்குறிப்பில் இருந்து தெரியவந்தது.

65 வயதுடைய இவருக்கு ஒரு மாதமாக மார்பு நோய இருந்ததால் பதுளை ஆஸ்பத்திரியில் மருந்து எடுத்துக் கொண்டு போகும் வழியில் பஸ் கிடைக்காததால் போகாமடித்தவிற்குக் கால்நடையாகப் போகத் தீர்மானித்துப் படிகளில் ஏறியபோது மரணம் சம்பவித்துள்ளது. மரணம் மரணம் சம்பவித்துள்ளது என்று அறிவிக்கப்படுகிறது.

நெவாடா, டிச. 18

நெவாடா பகுதியில் அமெரிக்கா நேற்று மற்றொரு சிறிய அணு ஆயுதத்தை நிலத்துக் கடியில் பரீட்சித்தது இப்பரீட்சைத் தொடரில் இது ஏழாவதாகும்.


நான் விரும்புவது

நெஸ்டோமோல்ட்

அது எனக்கு எவ்வளவோ நன்மையளிக்கின்றது...




குழந்தைகள், வாலிபர், குடும்பப் பெண்கள் ஆகிய எல்லோருமே விரும்பி அருந்தும்இந்த நெஸ்டோமோல்ட் அபார நன்மை அளிக்க வல்லது. சூடானலென்ன, ஐஸ் போன்ற குளிர்மையானலென்ன, இழந்த சக்தியை மீட்டுத் தரவும் ஊக்கமூட்டவும் சுவை நிரம்பிய நெஸ்டோமோல்டுக்கு நிகர் எதுவுமே கிடையாது. நெஸ்டோமோல்டில் ஒரு ஆச்சர்யமென்னவென்றல், உங்களுக்கு நன்மையானவை யாவும் அதில் அடங்கியிருப்பதுதான். இத்தனைக்கும் அதன் சுவை ஒரு தனி ரகம்.

நெஸ்டோமோல்ட் ஒரு உன்னத பால் ஆகாரம். இது மோல்ட்டட் பார்லி மற்றும் கோதுமை மாவுடன் முழுப் பாற்கட்டிகளை ஒன்று சேர்த்து கவனமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு உற்பத்தியாகும். இதில் விட்டமின் A, B2, மற்றும் E அதோடு கல்ஸியம், மக்னீஸியம், ஆகியவற்றின் பெறுமதியான ஓர்கனிக் பொஸ்பேட்டுகள்மற்றும் ஒவ்வொரு அவுன்ஸ் பவுடருக்கும் 137 மேலதிக விட்டமின் B சத்துக்கள் உள்ளன.

உற்பத்தி செய்து உத்தரவாதமளிப்பவர்கள்

**நெஸில்ஸ்**

இலவச சாம்பிள்

இலவச நெஸ்டோமோல்ட் சாம்பிளைப் பெற உங்களது பெயர் விலாசத்தையும் அதோடு தபால் கட்டணமாக 25 சதத்திற்கு முத்திரைகளும் அனுப்பி வைக்கவும்.

நெஸில்ஸ் புரொடக்ஸ் (சிலோன்) லிமிட்டெட்
த. பெ. 189,
கொழும்பு.

நெஸ்டோமோல்ட்

விட்டமின் B அடங்கியது.

### தேவை

இலங்கை முழுவதிலும் பிரதிநிதிகள் தேவை. பிணைப்பணம் ரூ. 350 மாதச் சம்பளம் ரூ. 90. நிர்வாகத்திறமையும், அனுபவமும், ஆங்கில அறிவுமுடைய, பிரதம லிகிதரும், காஷியரும் தேவை. பிணைப்பணம் ரொக்கம் ரூ. 1000, ஆதனப் பிணை ரூ. 2500. மாதச் சம்பளம் ரூ. 150. வெளிவேலை விஸ்தரிப்பாளர்கள் தேவை. பிணைப்பணம் ஆதனப் பிணை ரூ. 2000 இருத்தல் வேண்டும். மாதச்சம்பளம் ரூ. 125. ஆண், பெண் இருபாலாரும் நற்சாட்சிப்பத்திரங்களுடன் 30-12-61க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். நிர்வாகக் காரியதரிசி, இந்தோ சிலோன் பெனிவிற் சொசைற்றி லிமிட்டெட், 513, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

### நன்றி நவிலல்

கதிர்காமதாஸ் — ரதிமதி

எமது திருமணத்தின்போது நேரில் சமுகமளித்த, அன்பளிப்புகள் வழங்கிய, ஆசிச் செய்திகள் அனுப்பிய எல்லோருக்கும் இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்ரேம்.

கந்தரோடை, சுன்னுகம்.

### பிரஸ்னேவுக்கு வாழ்த்து

பம்பாய், டிச. 19

தற்பொழுது இந்தியாவிலிருக்கும் ரஷ்ய ஜனுதிபதி பிரஸ்னேவின் பிறந்த தினத்தை முன்னிட்டு அவருக்கு ராஷ்டிரபதி ராஜன்பாபுவும் பிரதமர் நேருவும் இன்று வாழ்த்துச் செய்தி அனுப்பினர்.


நேயர்கள் கவனிக்கவும்

எனது கண் பரிசோதனை நிலையத்துக்குப் பக்கத்தில் முதலாம் குறுக்குத் தெருச் சந்தியில்

**பேர்னுண்டோ**

என்ற விலாசத்துடன் ஒரு நிலையம் ஆரம்பமாகியுள்ளது.

அது எனது நிலையமன்று.

**வி ரி.பேர்னுண்டோ**

என்பதுவே எனது நிலையம்.

பல் வைத்தியர்
கண் பரிசோதகர்
11, பெரியதெரு, யாழ்ப்பாணம்.



**விரைவில் எதிர்பாருங்கள்!**

ராஜமணி பிக்சர்ஸ்

**பாசமலர்**

கடைசி வாரம்

கிங்ஸ்லி பிளாஸா
(கொழும்பு) (வெள்ளவத்தை)

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)

நாகேஸ்வர ராவ், அஞ்சலிதேவி, பாலையா நடித்த




சிறந்த கதை அமைப்பும் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் நடிப்பும் ஒருங்கே அமைந்த சித்திரம்

**மனேஹரா** (யாழ்ப்பாணம்) மாலை 6-30 இரவு 9-30)

சந்தியா, மகிபால் நடித்த

**'நவ்ரங்' NAVRANG (Hindi)**


# கோவா சரணுகதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ணுகதியைத் தொடர்ந்து அவற்றின் பொறுப்பை ஏற்ற இந்திய ராணுவ கவர்னரான ஜெனரல் கெண்டர் ஒரு பிரகடனம் விடுத்தார். அதில் அனைவருக்கும் பாதுகாப்பளிக்கப்படும் என்றும், எவ்வித பலாத்காரமும் அனுமதிக்கப்படாதென்றும் யாரிடமும் பகைமை பாராட்டக் கூடாது" என்றும் கூறப்பட்டிருந்தது.

## நேருவுக்கு பாராட்டுகள்

கோவாவின் மத்திய பகுதியில் மட்டும் கடும் எதிர்ப்பு இருந்ததென்றும், ஆயினும் எல்லாவிடங்களிலும் இந்தியத் துருப்புக்களுக்கு மகத்தான வரவேற்பு இருந்ததென்றும் அறிவிக்கப்படுகிறது. திறமையான ராணுவ நடவடிக்கையை மேற்கொண்டதற்காக பிரதமர் நேருவுக்கும், பாதுகாப்பு மந்திரி திரு. மேனனுக்கும் உலகின் பல பாகங்களிலிருந்தும் பாராட்டுத் தந்திகள் வந்து குவிந்துகொண்டிருக்கின்றன.

இராணுவ நடவடிக்கையின் காரணமாய் இந்தியாவுக்கு சொற்ப சேதமே ஏற்பட்டதாயும் 8 இந்திய வீரர்கள் மட்டுமே உயிரிழந்துள்ளதாயும் பிரதமர் நேரு இன்று புதுடில்லியில் அறிவித்தார்.

## இந்தியக் கொடிகள் பறக்கின்றன

கைப்பற்றப்பட்ட சகல பகுதிகளிலும் பேர்த்துக்கல் கொடிகள் கீழிறக்கப்பட்டு இந்தியக் கொடிகள் பறந்துகொண்டிருந்தன. எங்கும் குதூகலம் தென்பட்டது.

2500 வெள்ளைக்கார போர்த்துக்கல் துருப்புக்கள் ஓரிடத்தில் ஆயுதங்களுடன் சரணடைந்தன. இன்னும் ஆயிரக் கணக்கான போர்த்துக்கல் துருப்புக்கள் சரணடைந்துவருகின்றன. அவர்கள் கைது செய்யப்பட்டு பெல்காமுக்குக் கொண்டு வரப்படுகிருர்கள்.

## ஆலயங்கள் தப்பின

கிறிஸ்தவ தேவாலயங்கள், இதர வழிபாட்டு ஸ்தலங்கள் ஆகியன பாதிக்கப்படவில்லை என்றும், மின்வேகத்தில் இந்தியத் துருப்புக்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டதன் விளைவாய் அவைகள் காப்பற்றப்பட்டன என்றும் அறிவிக்கப்படுகிறது. போர்த்துக்கேயர், துருப்புக்களை முன்னேற விடாமல் பாலங்களை உடைத்தும், வழியில் கண்ணிகளை விதைத்தும் இராவிடில் இன்னும் சீக்கிரத்திலேயே ராணுவ நடவடிக்கை முடிந்திருக்கும் எனவும் ராணுவ தளகர்த்தர்கள் கூறுகின்றனர். ஆனல் இந்தியத் துருப்புக்கள் இன்னும் சற்றுத் தாமதித்திருந்தால் பெரும் அழிவு ஏற்பட்டிருக்கும் என்றும் மேலும் கூறப்பட்டது.

## படைகளுக்கு நேருஜி பாராட்டு

சரித்திரத்தில் ஒரு திறமையான ராணுவ சாதனை என இந்தியத் துருப்புக்களுக்கு பிரதமர் நேரு பாராட்டுத் தெரிவித்ததுடன், இப்போது செயலில் இறங்கியிராவிட்டால் அங்கு காலிகளும், சந்தர்ப்பவாதிகளும் தங்கள் வேலைகளைக் காட்டியிருப்பார்கள் என்ருர். ஐ. நா. விலும், இதர நாடுகளிலும் இந்தியாவைக் குறைகூறியவர்கள் உண்மை நிலையை அறியாதவர்கள் என்றும் அவர் கூறினர்.

காயமடைந்துள்ள டாமன் கவர்னர் சிகிச்சைக்காக பம்பாய்க்கு கொண்டு வரப்பட்டார்.

## பாதுகாப்பு சபையில் ரஷ்யா "வீட்டோ"

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், துருக்கி ஆகியநாடுகள் கோவாவில் சண்டை நிறுத்தம் செய்யுமாறும் இந்தியத் துருப்புக்களை கோவாவிலிருந்து வாபஸ் பெறுமாறும் பாதுகாப்பு சபையில் கொண்டுவந்த தீர்மானத்தை ரஷ்யா தனது "வீட்டோ" ரத்து அதிகாரத்தைப் பிரயோகித்து முறியடித்துவிட்டது.

அதற்குமுன் போர்த்துக்கலின் புகாரை நிராகரிக்கும்படி இலங்கை, லைபீரியா, ஐக்கிய அ ரபியக் குடியரசு ஆகிய நாடுகள் கொண்டுவந்த தீர்மானம் நிராகரிக்கப் பட்டது.

ரஷ்யாவின் "வீட்டோ" வைத் தொடர்ந்து அமெரிக்க பிரதிநிதி பேசுகையில், இந்த நடவடிக்கை, ஐ. நா. மரணமடைவதற்கான முதல் அங்கமாய் இருக்கும் என்ருர்.

ரஷ்யப் பிரதிநிதி ஸோரின், போர்த்துக்கல் ஐ. நா. தீர்மானத்தை நிறைவேற்றத்தவறியது பற்றியே விவாதிக்கவேண்டும் என்றும், ஐ. நா. வும், இதர நாடுகளும் போர்த்துக்கலுக்கு அளிக்கும் உதவியை நிறுத்தவேண்டும் என்றும் கூறினர்.

போத்துக்கல் கோவாவில் இருக்க சட்ட ரீதியான உரிமை கிடையாது என இந்தியப் பிரதிநிதி திரு. ஜா கூறினர்.

## இலங்கைப் பிரதிநிதி

இலங்கைப் பிரதிநிதி டாக்டர் மலலசேகரா பேசுகையில் காலனி ஆதிக்கத்தை நீடிப்பது சட்டவிரோதம் என்றும், போர்த்துக்கலின் போக்கு நியாயமற்றதென்றும் கூறி, கோவா பாரதத்தைச் சேர்ந்தது என்ருர். கோவா நடவடிக்கை பற்றி மேலும் பேசுகையில் அவர் ஸ்ரீ நேருவுக்குப் பாராட்டு தெரிவித்தார். நீண்டநாட்களாக நேரு காலனி ஆதிக்கத்துக்கெதிராகப் போராடினர் என்றும், இந்த நடவடிக்கை மூலம் தனது போராட்டத்தை அவர் பூர்த்திசெய்துவிட்டார் என்றும் டாக்டர் மலலசேகரா குறிப்பிட்டார்.

லைபீரியா, ஐக்கிய அராபியக் குடியரசு ஆகிய நாடுகளும் இந்தியாவை ஆதரித்தன.

### ரஷ்ய ஜனுதிபதி

பம்பாய், டிச. 18

இப்பொழுது இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்துவரும் ரஷ்ய ஜனுதிபதி பிரஸ்னேவ் இன்று பம்பாயிலிருந்து அங்கலேஸ்வருக்குச் சென்ருர். அங்கு அவர் எண்ணைக் கிணறுகளைப் பார்வையிட்டார்.

### குடும்பக்கட்டுப்பாடு தினம்

புதுடில்லி, டிச. 19

நேற்று இந்தியா முழுவதிலும் குடும்பக் கட்டுப்பாட்டுத் தினம் அனுஷ்டிக்கப்பட்டது ஒரு வைபவத்தில் இந்திய சுகாதார மந்திரி திரு. கர்மார்க்கர் பேசுகையில் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்துக்கென மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதென்ருர்.

### செனட்டில் மின்சாரத்தடை

கொழும்பு, செவ்வாய்

மின்சாரத்தடையின் காரணமாக இன்று செனட்சபை நடவடிக்கைகள் இடையே நிறுத்தி வைக்கப்பட்டது.


**அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்!**

மலிவு விற்பனை **டயரும்ஸ்** யாழ்ப்பாணம்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலைவீதி, 63ம் இலக்கத்திலுள்ளவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 20-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.